Free Digital Copy From ServeNow

# திருச்சபையை குறித்து தெரிந்துகொள்ளவேண்டிய அடிப்படையான காரியங்கள்

பென் ஃபோலே

ServeNow

Free Digital Copy From ServeNow

# திருச்சபையை குறித்து தெரிந்துகொள்ளவேண்டிய அடிப்படையான காரியங்கள்

***The Basic Things You Need to Know About Church (Tamil)***

By Ben Foley

Copyright © 2015 by *ServeNow*. Used by Permission. All rights reserved.

ISBN 978-1-958730-62-1

All Bible Verses are taken from the Holy Bible (Tamil) Copyright © by Bible Society of India

Published by *ServeNow*,
1817 Austin Bluffs Parkway,
#110, Colorado Springs, CO 80918.

Free Digital Copy From SaveNow

## அறிமுகம்

இயேசு கிறிஸ்துவின் தேவாலயம் இந்த பூமியில் மிகவும் அழகான "மக்கள் கூட்டம் உள்ள அமைப்பு ஆகும் ".இது நிச்சயமாக அதன் பிரச்சனைகள் மற்றும் போராட்டங்களோடு தொடர்ந்து கொண்டிருக்கிறது; சபை இங்கு செயல்பட அழைக்கப்பட்டபடி பூமியில் எதுவும் இல்லை. இயேசு சொன்னார் தேவாலயத்தின் மூலமாகத்தான் பரிசுத்த ஆவியானவர் இன்று பூமியில் செயல்படுகிறார். ஆகவே சபை என்றால் என்ன? இது என்ன செய்ய அழைக்கப்படுகிறது? எப்படி இது செயல்பட வேண்டும்? ஆரோக்கியமான சபை எப்படி இருக்கும்? **சபை**

"சபை" என்ற உண்மையான வார்த்தை முதலில் வேதாகமத்தில் எப்போது பயன்படுத்தப்பட்டது என்று பார்த்தால் இயேசு சுவிசேஷத்தில் இந்த வார்த்தையைப் பயன்படுத்தி பதிவு செய்துள்ளன. 79 முறை இந்த வார்த்தை புதிய ஏற்பாட்டில் பயன்படுத்தப்பட்டுள்ளது. தேவாலயம் என்பதின் கிரேக்க வார்த்தை எக்லேசியா. எக்லேசியா என்பது "ஒன்றாக கூடுவது " ,"அழைப்பு" என்று இரண்டு வார்த்தைகளில் வருகிறது. சபை அழைக்கபட்டவர்களின் ஓர் கூட்டம் ஆகும். சபை அழைக்கபட்டவர்களின் ஓர் கூட்டம் ஆகும் அதாவது பாவத்தில் இருந்து இயேசுவால் பிரிக்கப்பட்ட கூட்டம். கர்த்தருடைய பிள்ளைகள் சபையில் ஒன்று கூடவும் மேலும் அவரின் நாமம் ,குணாதிசயம்,அதிகாரம் மற்றும் வல்லமையை எடுத்து செல்லவும் அழைக்கப்பட்டுள்ளனர்.

## சபை நாம் சந்திக்கும் இடம்

வரலாற்று ரீதியாக பார்த்தால் திருச்சபை பல்வேறு இடங்களில் ஒன்றாகச் சந்தித்துள்ளது. ஆரம்பகால சபை முதலில் சிறிது காலம் ஜெப ஆலயங்களிலும் பின்னர் வீடுகளிலும் சந்தித்தனர். இன்று சபை கட்டிடங்கள், கூரைகள், மரத்தடிகள், பள்ளிக் கட்டிடங்கள், வீடுகள், ஹோட்டல்கள் என்று அனைத்து வகையான இடங்களிலும் கூடுகின்றனர். சபை மக்கள் கூடும் இடம் அல்ல, ஆனால் சபை என்பது இயேசு கிறிஸ்துவுக்கு சொந்தமான மக்கள் ஒன்று கூடும் இடம் ஆகும். உண்மையில், கிறித்தவம் ரோமானியப் பேரரசின் அதிகாரப்பூர்வ மதமாக பேரரசர் கான்ஸ்டன்டைன் நோபல் காலத்தில் வந்தது.தேவாலய கட்டிடங்கள் எல்லோருக்கும் பொது வழிபாட்டிற்காக அமைக்கப்பட்டது.

Free Digital Copy From SeveNow

**சபை என்ற வார்த்தையின் முதல் பயன்பாடு சபை என்ற வார்த்தை முதன்முதலில் மத்தேயுவில் பயன்படுத்தப்பட்டது**.

மத்தேயு 16:18 *“மேலும் நான் உனக்குச் சொல்லுகிறேன், நீ பேதுருவாயிருக்கிறாய், இந்தக்கல்லின் மேல் என் சபையைக்கட்டுவேன்; பாதாளத்தின் வாசல்கள் அதை மேற்கொள்வதில்லை.”*

என்னவெனில் ஒரு நபர் இயேசு உருவாக்கியுள்ள சபையில் அவரை இரட்சகராக விசுவாசித்து அறிக்கையிட்டு ஏற்று கொள்வதன் மூலம் அங்கத்தினராக சேர்க்கப்படுகிறார். உலகம் முழுவதும், விசுவாசிகள் ஒன்று கூடுகிறார்கள் உள்ளூர் சமூகமும் விசுவாசிகளுடன் ஒன்று கூடுகிறார்கள். விசுவாசிகள் தனித்தனியாய் வெவ்வேறு இடங்களில் கூடுகிறோம் ஆனால் கிறிஸ்துவில் நாம் அனைவரும் ஒரே உடல்.இயேசுவால் மீட்கப்பட்ட அனைவரும் பரலோகத்தில் ஒன்றாக சிம்மாசனத்தின் முன் கர்த்தரை தொழுதுகொள்வார்கள்.

## ஒரு நபர் எவ்வாறு திருச்சபையில் உறுப்பினராக முடியும்?

வெறுமனே சபை ஆராதனைகளில் கலந்துகொள்வதன் மூலம் ஒருவரை உண்மையான உறுப்பினராக ஆக்கிவிட முடியாது. உங்கள் சபையில் நிரந்தர உறுப்பினராக இருப்பது கூட நீங்கள் உண்மையாக கிறிஸ்துவுக்கு சொந்தமானவர்கள் என குறிக்காது. உங்கள் பெற்றோர்கள் கிறிஸ்தவர்களாக இருக்கலாம் மற்றும் பெற்றோர் அல்லது தாத்தா பாட்டி உங்கள் சபையை சேர்ந்தவர்களாக இருக்கலாம் இதை வைத்து கொண்டு நீங்கள் கிறிஸ்துவின் மீது நம்பிக்கை கொண்டுள்ளீர்கள் என கூறமுடியாது. கேள்வி என்னவென்றால், நீங்கள் இயேசு கிறிஸ்துவுக்கு உங்கள் தனிப்பட்ட வாழ்க்கையின் மூலம் சொந்தமானவரா?. உண்மையான திருச்சபை என்பது மனந்திரும்பி இயேசு கிறிஸ்துவை சொந்த ரட்சகராக ஏற்றுக்கொண்டு மறுபடியும் பிறந்த விசுவாசிகளின் கூட்டமே ஆகும். சபையை பற்றி பல்வேறு எடுத்துக்காட்டுகள் உள்ளன அதை புரிந்துகொள்ள வேதாகமம் உதவியாக உள்ளது .அவற்றில் சில சிலவற்றை இங்கே பார்க்கலாம் :

## சரீரம்

அப்போஸ்தலனாகிய பவுல் எபேஸில் உள்ள சபைக்கு எழுதுகிறார்,

எபேசியர் 1 : 22,23 *22 - எல்லாவற்றையும் அவருடைய பாதங்களுக்குக் கீழ்ப்படுத்தி, 23 - எல்லாவற்றையும் எல்லாவற்றாலும்*

Free Digital Copy From SaveNow

*நிரப்புகிறவருடைய நிறைவாகிய சரீரமான சபைக்கு அவரை எல்லாவற்றிற்கும் மேலான தலையாகத் தந்தருளினார்.*

இவர் சபையாகிய சரீரத்தை பற்றி கொரிந்து பட்டணத்தில் உள்ள சபைக்கு எழுதியுள்ளார். 1 கொரிந்தியர் 12:12 *எப்படியெனில், சரீரம் ஒன்று, அதற்கு அவயவங்கள் அநேகம்; ஒரே சரீரத்தின் அவயவங்களெல்லாம் அநேகமாயிருந்தும், சரீரம் ஒன்றாகவேயிருக்கிறது; அந்தப்பிரகாரமாகக் கிறிஸ்துவும் இருக்கிறார்.*

ஒரு உடல் பல பாகங்களைக் கொண்டுள்ளது, ஆனால் அதன் பாகங்கள் அனைத்துமே ஒரே உடலை கிறிஸ்துவுக்குள் உருவாக்குகின்றன, இது முரண்பாடு அல்ல ஆனால் ஒரு அற்புதமான உண்மை. இயேசு கிறிஸ்துவின் இறையாட்சி மற்றும் தலைமையின் கீழ் நாம் ஒருவருக்கொருவர் எதிராக அல்லாமல் ஒன்றிணைந்து செயல்படுவது மிகவும் அவசியம். ஒரு சரீரத்தை பிரிக்கவோ அல்லது தனிமைப்படுத்தவோ முடியாது.

உடலின் ஆரோக்கியம், வளர்ச்சி மற்றும் வலிமை என்பது ஒவ்வொரு பகுதியும் ஒட்டுமொத்தமாக அதன் வேலையைச் செய்வது மிகவும் அவசியம் ஆகும். 1 பேதுரு 4:10-11 *10 - அவனவன் பெற்ற வரத்தின்படியே நீங்கள் தேவனுடைய பற்பல கிருபையுள்ள ஈவுகளைப் பகிர்ந்துகொடுக்கும் நல்ல உக்கிராணக்காரர்போல, ஒருவருக்கொருவர் உதவிசெய்யுங்கள். 11 - ஒருவன் போதித்தால் தேவனுடைய வாக்கியங்களின்படி போதிக்கக்கடவன்; ஒருவன் உதவிசெய்தால் தேவன் தந்தருளும் பெலத்தின்படி செய்யக்கடவன்; எல்லாவற்றிலேயும் இயேசுகிறிஸ்துமூலமாய் தேவன் மகிமைப்படும்படியே செய்வீர்களாக; அவருக்கே மகிமையும் வல்லமையும் சதாகாலங்களிலும் உண்டாயிருப்பதாக. ஆமென்.*

## கிறிஸ்துவின் மணவாட்டி

அப்போஸ்தலனாகிய பவுல் இதை ஒரு மணப்பெண்ணுடன் ஒப்பிடுகிறார் எபேசியர் 5:25-28 *25. புருஷர்களே, உங்கள் மனைவிகளில் அன்புகூருங்கள்; அப்படியே கிறிஸ்துவும் சபையில் அன்புகூர்ந்து, 26. தாம் அதைத் திருவசனத்தைக்கொண்டு தண்ணீர் முழுக்கினால் சுத்திகரித்து, பரிசுத்தமாக்குகிறதற்கும், 27. கறைதிரை முதலானவைகள் ஒன்றும் இல்லாமல் பரிசுத்தமும் பிழையற்றதுமான மகிமையுள்ள சபையாக அதைத் தமக்குமுன் நிறுத்திக்கொள்வதற்கும் தம்மைத்தாமே அதற்காக ஒப்புக்கொடுத்தார். 28 அப்படியே, புருஷர்களும் தங்கள் மனைவிகளைத் தங்கள் சொந்தச் சரீரங்களாகப் பாவித்து, அவர்களில்*

Free Digital Copy From SeveNow

*அன்புகூரவேண்டும்; தன் மனைவியில் அன்புகூருகிறவன் தன்னில்தான் அன்புகூருகிறான்.*

யோவான் 14:2-4 ல் இயேசு தம் சீஷர்களுக்கு பரலோகத்திற்குத் திரும்பிச் சென்று அவர்களுக்காக ஓர் இடத்தை ஆயத்தப்படுத்தப் போவதாக வாக்குறுதி அளித்தார். ஒரு நாள் திரும்பி வந்து அவர்களை தன்னுடன் அழைத்துச் செல்வதாக அவர் உறுதியளித்தார். யூதர்களாக இருப்பதால், இயேசு எபிரெய திருமண மொழியையும் அடையாளத்தையும் பயன்படுத்தினார் என்பதை சீஷர்கள் புரிந்து கொண்டார்கள். ஒரு யூத மணமகனும் மணமகளும் திருமணம் செய்து கொள்வதற்கு முன்பு, அவருக்கும் அவரது மனைவிக்கும் வாழ ஒரு இடத்தை தயார் செய்ய வேண்டும் , பெரும்பாலும் தனது தந்தையின் வீட்டோடு இணைக்கப்பட்ட தனித்தனி குடியிருப்புகளைக் மணமகன் கட்டுவார். இந்த நேரத்தில், மணமகள் இந்த "பெரிய நாளுக்கு" தன்னைத் தயார்படுத்திக் கொள்ள வேண்டும். அவள் எப்போதும் தயாராக இருக்க வேண்டும், ஏனென்றால் எந்த நேரத்திலும் மணமகன் அவளுக்காக வரலாம்! மேலும் திருமணத்தின் உண்மையான நாள் மணமகன் மற்றும் மணமகளால் நிர்ணயிக்கப்படவில்லை, அதை தீர்மானிப்பது தந்தையின் பொறுப்பாகும். அதேபோல், இயேசுவின் வருகைக்கு நாம் எல்லா நேரங்களிலும் தயாராக இருக்க வேண்டும். பூமியில் என்றென்றும் அவருடன் இருக்க நம்மை தயார்படுத்திக் கொள்வதே நமது வேலை. மத்தேயு 24:42-44 *42 உங்கள் ஆண்டவர் இன்ன நாழிகையிலே வருவாரென்று நீங்கள் அறியாதிருக்கிறபடியினால் விழித்திருங்கள். 43 திருடன் இன்ன ஜாமத்தில் வருவானென்று வீட்டெஜமான் அறிந்திருந்தால், அவன் விழித்திருந்து, தன் வீட்டைக் கன்னமிடவொட்டானென்று அறிவீர்கள். 44 நீங்கள் நினையாத நாழிகையிலே மனுஷகுமாரன் வருவார்; ஆதலால், நீங்களும் ஆயத்தமாயிருங்கள்.*

விசுவாசத்தினாலே அவருக்காக வாழ்வதன் மூலமும், அவருக்குச் ஊழியம் செய்வதன் மூலமும், அவருடைய நாமத்தினாலே நற்கிரியைகளைச் செய்வதன் மூலமும் நாம் நம்மை ஆயத்தப்படுத்திக் கொள்ள முடியும். எபேசியர் 2:10 *=10 ஏனெனில், நற்கிரியைகளைச் செய்கிறதற்கு நாம் கிறிஸ்து இயேசுவுக்குள் சிருஷ்டிக்கப்பட்டு, தேவனுடைய செய்கையாயிருக்கிறோம்; அவைகளில் நாம் நடக்கும்படி அவர் முன்னதாக அவைகளை ஆயத்தம்பண்ணியிருக்கிறார்.*

Free Digital Copy From SaveNow

## குடும்பம்

சபை பெரும்பாலும் கர்த்தரின் வீடு அல்லது கர்த்தரின் குடும்பம் என்று குறிப்பிடப்படுகிறது, மேலும் நாம் கர்த்தரின் பிள்ளைகள் என்று குறிப்பிடப்படுகிறோம்!

காலத்தியர் 6 :*10 10 ஆகையால் நமக்குக் கிடைக்கும் சமயத்திற்குத்தக்கதாக, யாவருக்கும், விசேஷமாக விசுவாச குடும்பத்தார்களுக்கும், நன்மைசெய்யக்கடவோம்.*

எபேசியர் 2:19 *19 ஆகையால், நீங்கள் இனி அந்நியரும் பரதேசிகளுமாயிராமல், பரிசுத்தவான்களோடே ஒரே நகரத்தாரும் தேவனுடைய வீட்டாருமாயிருந்து,*

காலத்தியர் 3 :26 -29 *26 நீங்களெல்லாரும் கிறிஸ்து இயேசுவைப்பற்றும் விசுவாசத்தினால் தேவனுடைய புத்திரராயிருக்கிறீர்களே. 27 ஏனெனில், உங்களில் கிறிஸ்துவுக்குள்ளாக, ஞானஸ்நானம் பெற்றவர்கள் எத்தனைபேரோ அத்தனைபேரும் கிறிஸ்துவைத் தரித்துக்கொண்டீர்களே. 28 யூதனென்றும் கிரேக்கனென்றுமில்லை, அடிமையென்றும் சுயாதீனனென்றுமில்லை, ஆணென்றும் பெண்ணென்றுமில்லை; நீங்களெல்லாரும் கிறிஸ்து இயேசுவுக்குள் ஒன்றாயிருக்கிறீர்கள். 29 நீங்கள் கிறிஸ்துவினுடையவர்களானால், ஆபிரகாமின் சந்ததியாராயும், வாக்குத்தத்தத்தின்படியே சுதந்தரராயுமிருக்கிறீர்கள்.*

உண்மையான விசுவாசிகள் கர்த்தரின் குடும்பத்தில் தத்தெடுக்கப்பட்டு அவரது குடும்பத்தின் ஒரு பகுதியாக மாற்றப்பட்டுள்ளனர். இதைவிடப் பெரிய பாக்கியமும், சொந்தம் என்ற உணர்வும் இல்லை. கர்த்தரை நம் தகப்பனாக அறிவது மிகவும் சிறப்பானது ஆகும் . இது நம்மை கிறிஸ்துவில் சகோதர சகோதரிகளாக ஆக்குகிறது. கர்த்தரின் குடும்பத்தின் இந்த உண்மை மனித குடும்பத்தையும் கடந்து செல்கிறது. இது அருமையான உண்மை ஆகும்.

## சத்தியத்தின் தூண் மற்றும் அடித்தளம்

1 தீமோத்தேயு 3:15-*16 15 தாமதிப்பேனாகில், தேவனுடைய வீட்டிலே நடக்கவேண்டிய வகையை நீ அறியும்படி இவைகளை உனக்கு எழுதுகிறேன்; அந்த வீடு ஜீவனுள்ள தேவனுடைய சபையாய்ச் சத்தியத்துக்குத் தூணும் ஆதாரமுமாயிருக்கிறது. 16 அன்றியும், தேவபக்திக்குரிய இரகசியமானது யாவரும் ஒப்புக்கொள்ளுகிறபடியே மகா மேன்மையுள்ளது. தேவன் மாம்சத்திலே வெளிப்பட்டார், ஆவியிலே நீதியுள்ளவரென்று விளங்கப்பட்டார், தேவதூதர்களால்*

Free Digital Copy From SeveNow

*காணப்பட்டார், புறஜாதிகளிடத்தில் பிரசங்கிக்கப்பட்டார், உலகத்திலே விசுவாசிக்கப்பட்டார், மகிமையிலே ஏறெடுத்துக்கொள்ளப்பட்டார்.*

தூண்கள் ஒரு கட்டிட கட்டமைப்பை தங்குகின்றன. ஒரு கட்டிடத்தின் அடித்தளம் முக்கியமானது.இதில் அடித்தளம் சரியாக போடப்படாமல் தூண்கள் பலவீனமாக இருந்தால்,முழு கட்டிடத்திற்கும் அல்லது வீட்டிற்கும் பிரச்சினைகள் ஏற்படும். மேலும் இடிந்து விழும் அபாயம் ஏற்படும். கர்த்தருடைய வார்த்தை இந்த உலகில் இருக்க வேண்டிய உப்பு மற்றும் ஒளி என்று சபை பிரகடனம் செய்து நடைமுறைப்படுத்த வேண்டும். இது இந்த உலகத்தில் உள்ள பல பொய்களின் மத்தியில் சத்தியத்தின் தூண் மற்றும் அடித்தளமாகும்.

## சமூகம்

I பேதுரு 2:9 9 *நீங்களோ, உங்களை அந்தகாரத்தினின்று தம்முடைய ஆச்சரியமான ஒளியினிடத்திற்கு வரவழைத்தவருடைய புண்ணியங்களை அறிவிக்கும்படிக்குத் தெரிந்துகொள்ளப்பட்ட சந்ததியாயும், ராஜரீகமான ஆசாரியக்கூட்டமாயும், பரிசுத்த ஜாதியாயும், அவருக்குச் சொந்தமான ஜனமாயும் இருக்கிறீர்கள்.*

திருச்சபை என்பது கிறிஸ்துவைப் பின்பற்றுபவர்களின் சமூகமாகும்.தேவாலயம் என்பது இயேசுவால் அழைக்கப்பட்ட மற்றும் இயேசுவைச் சேர்ந்த பெரிய அல்லது சிறிய நபர்களின் குழுவாகும். நாம் எந்த பூமிக்குரிய சமூகத்தில் வாழ்ந்தாலும், நமது குடியுரிமை முதலில் பரலோகத்தில் உள்ளது! பிலிப்பியர் 3:20 20 *நம்முடைய குடியிருப்போ பரலோகத்திலிருக்கிறது, அங்கேயிருந்து கர்த்தராயிருக்கிற இயேசுகிறிஸ்து என்னும் இரட்சகர் வர எதிர்பார்த்துக்கொண்டிருக்கிறோம்.* திருச்சபை என்பது இயேசுவின் சமூகம்!

## ஆவிக்குரிய சேனை

2 தீமோத்தேயு 2:2 ல் அப்போஸ்தலனாகிய பவுல் தன் சீஷனாகிய தீமோத்தேயுவுக்கு எழுதுகிறதாவது, *2 நீயும் இயேசுகிறிஸ்துவுக்கு நல்ல போர்ச்சேவகனாய்த் தீங்கநுபவி.*

இதே கருத்தை 2 கொரிந்தியர் 10:3-5-*லும் குறிப்பிடுகிறார். 3 நாங்கள் மாம்சத்தில் நடக்கிறவர்களாயிருந்தும், மாம்சத்தின்படி போர்செய்கிறவர்களல்ல. 4 எங்களுடைய போராயுதங்கள் மாம்சத்துக்கேற்றவைகளாயிராமல், அரண்களை நிர்மூலமாக்குகிறதற்கு தேவபலமுள்ளவைகளாயிருக்கிறது. 5 அவைகளால் நாங்கள் தர்க்கங்களையும், தேவனை அறிகிற அறிவுக்கு விரோதமாய் எழும்புகிற எல்லா மேட்டிமையையும் நிர்மூலமாக்கி,*

Free Digital Copy From ServeNow

*எந்த எண்ணத்தையும் கிறிஸ்துவுக்குக் கீழ்ப்படியச் சிறைப்படுத்துகிறவர்களாயிருக்கிறோம்.*

எபேசுவிலுள்ள திருச்சபைக்கு பவுல் எழுதுகிறார், எபேசியர் 6:10-18 10
*கடைசியாக, என் சகோதரரே, கர்த்தரிலும் அவருடைய சத்துவத்தின் வல்லமையிலும் பலப்படுங்கள். 11*
*நீங்கள் பிசாசின் தந்திரங்களோடு எதிர்த்துநிற்கத் திராணியுள்ளவர்களாகும்படி, தேவனுடைய சர்வாயுதவர்க்கத்தையும் தரித்துக்கொள்ளுங்கள். 12*
*ஏனெனில், மாம்சத்தோடும் இரத்தத்தோடுமல்ல, துரைத்தனங்களோடும், அதிகாரங்களோடும், இப்பிரபஞ்சத்தின் அந்தகார லோகாதிபதிகளோடும், வானமண்டலங்களிலுள்ள பொல்லாத ஆவிகளின் சேனைகளோடும் நமக்குப் போராட்டம் உண்டு. 13*
*ஆகையால், தீங்குநாளிலே அவைகளை நீங்கள் எதிர்க்கவும், சகலத்தையும் செய்துமுடித்தவர்களாய் நிற்கவும் திராணியுள்ளவர்களாகும்படிக்கு, தேவனுடைய சர்வாயுதவர்க்கத்தையும் எடுத்துக்கொள்ளுங்கள். 14 சத்தியம் என்னும்*
*கச்சையை உங்கள் அரையில் கட்டினவர்களாயும் நீதியென்னும் மார்க்கவசத்தைத் தரித்தவர்களாயும்; 15 சமாதானத்தின்*
*சுவிசேஷத்திற்குரிய ஆயத்தம் என்னும் பாதரட்சையைக் கால்களிலே தொடுத்தவர்களாயும், 16 பொல்லாங்கன் எய்யும்*
*அக்கினியாஸ்திரங்களையெல்லாம் அவித்துப்போடத்தக்கதாய், எல்லாவற்றிற்கும் மேலாக விசுவாசமென்னும் கேடகத்தைப் பிடித்துக்கொண்டவர்களாயும் நில்லுங்கள். 17 இரட்சணியமென்னும்*
*தலைச்சீராவையும், தேவவசனமாகிய ஆவியின் பட்டயத்தையும் எடுத்துக்கொள்ளுங்கள். 18 எந்தச் சமயத்திலும் சகலவிதமான*
*வேண்டுதலோடும் விண்ணப்பத்தோடும் ஆவியினாலே ஜெபம்பண்ணி, அதன்பொருட்டு மிகுந்த மனஉறுதியோடும் சகல பரிசுத்தவான்களுக்காகவும் பண்ணும் வேண்டுதலோடும் விழித்துக்கொண்டிருங்கள்.*

நமது போராட்டம் மற்ற மனிதர்களுக்கு எதிரானது அல்ல. பிசாசுக்கும் அவனுடைய சேனைக்கும் எதிரான ஆவிக்குரிய யுத்தம் தான் நமது யுத்தம். நாம் போராடும் விதம் மனிதனால் உருவாக்கப்பட்ட ஆயுதங்களுடன் உலகம் போராடும் விதம் அல்ல; மாறாக கர்த்தரின் வார்த்தையுடனும், முழங்கால்களில் ஜெபத்துடனும் போராடும் போராட்டம் ஆகும் ! சபை என்பது ஒவ்வொரு நாளும் கர்த்தரின் கவசத்தை அணிந்து, இயேசுவில் உள்ள சுதந்திரத்தை மற்றவர்கள் அறிந்து கொள்வதற்காக அவர் நமக்கு வழங்கிய ஆவிக்குரிய ஆயுதங்களைப் பயன்படுத்தி வாழும் விசுவாசிகளின் ஆவிக்குரிய சேனையாகும் !

Free Digital Copy From SeveNow

## ஆவிக்குரிய வீடு மற்றும் பரிசுத்த ஆசாரியத்துவம்

1 பேதுரு 2:4-5 *4 மனுஷரால் தள்ளப்பட்டதாயினும், தேவனால் தெரிந்துகொள்ளப்பட்டதும் விலையேறப்பெற்றதுமாயிருக்கிற ஜீவனுள்ள கல்லாகிய அவரிடத்தில் சேர்ந்தவர்களாகிய நீங்களும், 5 ஜீவனுள்ள கற்களைப்போல ஆவிக்கேற்ற மாளிகையாகவும், இயேசுகிறிஸ்து மூலமாய் தேவனுக்குப் பிரியமான ஆவிக்கேற்ற பலிகளைச் செலுத்தும்படிக்குப் பரிசுத்த ஆசாரியக்கூட்டமாகவும் கட்டப்பட்டுவருகிறீர்கள்.*

மோசேயின் சட்டத்தின்படி, இஸ்ரவேலர்கள் கர்த்தருக்கு விலங்குகளையும் பிற பலிகளையும் செலுத்த வேண்டியிருந்தது. லேவி கோத்திரம் முழு சமூகத்திற்கும் ஆசாரியர்களாக காணப்பட்டார்கள்.கர்த்தரை ஆராதிக்க ஒதுக்கப்பட்ட ஆலயத்தில் இவர்கள் பணி செய்ய வேண்டும். இருப்பினும், இப்போது, இயேசு நம்முடன் செய்துள்ள புதிய உடன்படிக்கையின் கீழ், கடவுளின் மக்களாகிய நாம் தேவனுடைய பிரசன்னம் வாசமாயிருக்கும் ஆலயமாகிய ஆவிக்குரிய இல்லமாக இருக்கிறோம்! 1 கொரிந்தியர் 6:19 *19 உங்கள் சரீரமானது நீங்கள் தேவனாலே பெற்றும் உங்களில் தங்கியும் இருக்கிற பரிசுத்த ஆவியினுடைய ஆலயமாயிருக்கிறதென்றும், நீங்கள் உங்களுடையவர்களல்லவென்றும் அறியீர்களா?*

ஆகையால், தேவனுடைய ஆலயமாகவும், வீட்டாராகவும், ஆசாரியராகவும், கர்த்தர் ஏற்றுக்கொள்ளக்கூடிய ஆவிக்குரிய பலிகளை நாம் செலுத்த வேண்டும். அந்த ஆவிக்குரிய தியாகங்கள் எவையெனில் நம்முடைய முழு வாழ்க்கையையும் உடலையும் உள்ளடக்கியது, நமது பாராட்டு , நன்றி, கொடுப்பது, நன்மை செய்வது மற்றும் ஒருவருக்கொருவர் உதவுவது.

ரோமர் 12:1 *1 அப்படியிருக்க, சகோதரரே, நீங்கள் உங்கள் சரீரங்களைப் பரிசுத்தமும் தேவனுக்குப் பிரியமுமான ஜீவபலியாக ஒப்புக்கொடுக்கவேண்டுமென்று, தேவனுடைய இரக்கங்களை முன்னிட்டு உங்களை வேண்டிக்கொள்ளுகிறேன்; இதுவே நீங்கள் செய்யத்தக்க புத்தியுள்ள ஆராதனை.*

எபிரேயர் 13:15-16 *15 ஆகையால், அவருடைய நாமத்தைத் துதிக்கும் உதடுகளின் கனியாகிய ஸ்தோத்திரபலியை அவர்மூலமாய் எப்போதும் தேவனுக்குச் செலுத்தக்கடவோம். 16 அன்றியும்*

Free Digital Copy From ServeNow

*நன்மைசெய்யவும், தானதர்மம்பண்ணவும் மறவாதிருங்கள்; இப்படிப்பட்ட பலிகளின்மேல் தேவன் பிரியமாயிருக்கிறார்.*

## சபையின் நோக்கம்
## கர்த்தரை போற்றுங்கள்: ஆராதனை

இந்த நோக்கம் 1 பேதுரு 2:9-*10 இல் தெளிவுபடுத்தப்பட்டுள்ளது, 9 நீங்களோ, உங்களை அந்தகாரத்தினின்று தம்முடைய ஆச்சரியமான ஒளியினிடத்திற்கு வரவழைத்தவருடைய புண்ணியங்களை அறிவிக்கும்படிக்குத் தெரிந்துகொள்ளப்பட்ட சந்ததியாயும், ராஜரீகமான ஆசாரியக்கூட்டமாயும், பரிசுத்த ஜாதியாயும், அவருக்குச் சொந்தமான ஜனமாயும் இருக்கிறீர்கள். 10 முன்னே நீங்கள் தேவனுடைய ஜனங்களாயிருக்கவில்லை, இப்பொழுதோ அவருடைய ஜனங்களாயிருக்கிறீர்கள்; முன்னே நீங்கள் இரக்கம் பெறாதவர்களாயிருந்தீர்கள். இப்பொழுதோ இரக்கம் பெற்றவர்களாயிருக்கிறீர்கள்.*

சபை என்பது பரலோகத்தில் நடைபெறும் ஆராதனையின் ஒரு சிறிய நிகழ்வாக பூமியில் காணப்படுகிறது . (வெளிப்படுதல் 4-5). பரலோக ஆராதனையில் நமது புகழை அறிவிப்பதில் கவனம் செலுத்துவதில்லை, ஆனால் கர்த்தரின் புகழை பாடுவதே நோக்கம் . இது குறிப்பாக கர்த்தரை ஆராதிப்பதிலும் புகழ்வதிலும் கவனம் செலுத்துகிறது.கிறிஸ்துவுக்குள் அவர் நமக்காகச் செய்த கிருபைக்காக. கிறிஸ்து தனது இரத்தத்தால் நம்மை மீட்டெடுத்ததைக் கொண்டாடுகிறது மற்றும் சாட்சியிடுகிறது .

இயேசு கிறிஸ்துவில் காணப்படும் நற்குணம், கிருபை , மற்றும் மீட்பு ஆகியவற்றை திருச்சபை அறிவிக்க வேண்டும். அது அவரையும் அவருடைய மகிமையுள்ள புகழ்ச்சியையும் பூமியெங்கும் பிரசித்தப்படுத்துவதாகும்.கர்த்தரின் பிள்ளைகள் ஒன்று கூடும்போது ஆராதனை ஒரு குறிப்பிடத்தக்க பண்பு மிக்கதாகவும் ஒழுங்கு முறையாகவும் இருக்க வேண்டும். கிறிஸ்துவின் ஆளுமை, பிரசன்னம் , வல்லமை நாம் கொண்டாடபடவேண்டியது ஆகும்.

## ஜெபம்

கொலோசெயர் 4:2 *2 இடைவிடாமல் ஜெபம்பண்ணுங்கள், ஸ்தோத்திரத்துடன் ஜெபத்தில் விழித்திருங்கள்.*

Free Digital Copy From ServeNow

திருச்சபையை குறித்து தெரிந்துகொள்ளவேண்டிய அடிப்படையான காரியங்கள்

1 தீமோத்தேயு 2:1-6 *1 நான் பிரதானமாய்ச் சொல்லுகிற புத்தியென்னவெனில், எல்லா மனுஷருக்காகவும் விண்ணப்பங்களையும் ஜெபங்களையும் வேண்டுதல்களையும் ஸ்தோத்திரங்களையும் பண்ணவேண்டும்; 2 நாம் எல்லாப் பக்தியோடும் நல்லொழுக்கத்தோடும் கலகமில்லாமல் அமைதலுள்ள ஜீவனம்பண்ணும்படிக்கு, ராஜாக்களுக்காகவும், அதிகாரமுள்ள யாவருக்காகவும் அப்படியே செய்யவேண்டும். 3 நம்முடைய இரட்சகராகிய தேவனுக்குமுன்பாக அது நன்மையும் பிரியமுமாயிருக்கிறது. 4 எல்லா மனுஷரும் இரட்சிக்கப்படவும், சத்தியத்தை அறிகிற அறிவை அடையவும், அவர் சித்தமுள்ளவராயிருக்கிறார். 5 தேவன் ஒருவரே தேவனுக்கும் மனுஷருக்கும் மத்தியஸ்தரும் ஒருவரே. 6 எல்லாரையும் மீட்கும் பொருளாகத் தம்மை ஒப்புக்கொடுத்த மனுஷனாகிய கிறிஸ்து இயேசு அவரே; இதற்குரியசாட்சி ஏற்ற காலங்களில் விளங்கிவருகிறது.*

சபை ஜெபத்தை தங்கள் முதல் முன்னுரிமையாக மாற்ற வேண்டும். நாம் எல்லா நேரங்களிலும், எல்லாவற்றையும் பற்றி ஜெபிக்க வேண்டும் மற்றும் சபை ஜெபத்திற்காக ஒன்றுகூட வேண்டும்.

## கர்த்தரின் ஞானத்தை அறிவியுங்கள்

எபேசியர் *3:10-11 10 உன்னதங்களிலுள்ள துரைத்தனங்களுக்கும் அதிகாரங்களுக்கும் அவருடைய அநந்த ஞானமானது சபையின்மூலமாய் இப்பொழுது தெரியவரும்பொருட்டாக, 11 இயேசுகிறிஸ்துவைக்கொண்டு எல்லாவற்றையும் சிருஷ்டித்த தேவனுக்குள்ளே ஆதிகாலங்கள் முதல் மறைந்திருந்த இரகசியத்தினுடைய ஐக்கியம் இன்னதென்று, எல்லாருக்கும் வெளிப்படையாகக் காண்பிக்கிறதற்கு, இந்தக்கிருபை எனக்கு அளிக்கப்பட்டிருக்கிறது.*

கர்த்தருடைய வழிகளும் ஞானமும் அறிவிக்கப்பட்டு வெளிப்படுத்தப்படுவதற்கான ஒரு வாசலாக சபை உள்ளது. சபையின் மூலமே (கிறிஸ்துவால் மீட்கப்பட்டவர்கள்) கர்த்தரின் திரித்துவம், புரிந்துகொள்ள முடியாத ஞானம் ஆகியவைகள் புரிந்து கொள்ளப்படுகிறது.

## இயேசுவைப் பின்பற்றுபவர்களை உருவாக்கி கற்பிக்கவும்

மத்தேயு 28:18-20 *18 அப்பொழுது இயேசு சமீபத்தில் வந்து, அவர்களை நோக்கி: வானத்திலும் பூமியிலும் சகல அதிகாரமும் எனக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது. 19 ஆகையால், நீங்கள் புறப்பட்டுப்போய் சகல ஜாதிகளையும் சீஷராக்கி, பிதா குமாரன் பரிசுத்த ஆவியின்*

Free Digital Copy From ServeNow

*நாமத்திலே அவர்களுக்கு ஞானஸ்நானங்கொடுத்து, 20 நான் உங்களுக்குக் கட்டளையிட்ட யாவையும் அவர்கள் கைக்கொள்ளும்படி அவர்களுக்கு உபதேசம் பண்ணுங்கள்; இதோ, உலகத்தின் முடிவுபரியந்தம் சகல நாட்களிலும் நான் உங்களுடனேகூட இருக்கிறேன் என்றார். ஆமென்.*

அப்போஸ்தலனாகிய பவுல் எபேசியர் *4:11-16 இல் எழுதுகிறார், 11 மேலும் நாம் அனைவரும் தேவனுடைய குமாரனைப் பற்றும் விசுவாசத்திலும் அறிவிலும் ஒருமைப்பட்டவர்களாகி, கிறிஸ்துவினுடைய நிறைவான வளர்ச்சியின் அளவுக்குத்தக்க பூரண புருஷராகும்வரைக்கும், 12 பரிசுத்தவான்கள் சீர்பொருந்தும்பொருட்டு, சுவிசேஷ ஊழியத்தின் வேலைக்காகவும், கிறிஸ்துவின் சரீரமாகிய சபையானது பக்திவிருத்தி அடைவதற்காகவும், 13 அவர், சிலரை அப்போஸ்தலராகவும், சிலரைத் தீர்க்கதரிசிகளாகவும், சிலரைச் சுவிசேஷகராகவும், சிலரை மேய்ப்பராகவும், போதகராகவும் ஏற்படுத்தினார். 14 நாம் இனிக் குழந்தைகளாயிராமல், மனுஷருடைய சூதும் வஞ்சிக்கிறதற்கேதுவான தந்திரமுமுள்ள போதகமாய் பலவித காற்றினாலே அலைகளைப்போல அடிபட்டு அலைகிறவர்களாயிராமல், 15 அன்புடன் சத்தியத்தைக் கைகொண்டு தலையாகிய கிறிஸ்துவுக்குள் எல்லாவற்றிலேயும், நாம் வளருகிறவர்களாயிருக்கும்படியாக அப்படிச் செய்தார். 16 அவராலே சரீரம் முழுதும், அதற்கு உதவியாயிருக்கிற சகல கணுக்களினாலும் இசைவாய்க் கட்டி இணைக்கப்பட்டு, ஒவ்வொரு அவயவமும் தன்தன் அளவுக்குத்தக்கதாய்க் கிரியைசெய்கிறபடியே, அது அன்பினாலே தனக்கு பக்திவிருத்தி உண்டாக்குகிறதற்கேதுவாகச் சரீரவளர்ச்சியை உண்டாக்குகிறது.*

நாம் பெலப்படுவதற்கு, ஆரோக்கியமாக வாழ்வதற்கு, ஆவிக்குரிய வாழ்வில் முதிர்ச்சியாக வளர ஊக்குவிக்கப்படுவதற்கும், கர்த்தரின் அதிகாரத்தை பெறுவதற்கும் சபையாக "ஒன்றிணைவது" அல்லது கூடிவருவது மிகவும் முக்கியம் ஆகும். இது இயேசு கிறிஸ்துவை மேலும் அர்ப்பணிப்புடன் பின்பற்றவும் மேலும் அநேகரை சீஷர்களாக்கவும் மிகவும் உதவியாக இருக்கும். சீஷன் என்பவர் இயேசுவைப் போல ஆவதற்காக இயேசுவிடமிருந்து கற்றுக் கொள்பவர். நீங்கள் கிறிஸ்துவுக்கு உங்களை அர்ப்பணிக்கும்போது, மற்றவர்கள் கிறிஸ்துவைப் போல ஆக உதவலாம்!

## உக்கிரணத்துவதை பயிற்றுவித்தல் மற்றும் சபையின் ஒழுங்குகளை கடைபிடித்தல்

Free Digital Copy From SaveNow

<u>திருச்சபையை குறித்து தெரிந்துகொள்ளவேண்டிய அடிப்படையான காரியங்கள்</u>

**மத்தேயு 18:15-20** *15 உன் சகோதரன் உனக்கு விரோதமாகக் குற்றஞ்செய்தால், அவனிடத்தில் நீ போய், நீயும் அவனும் தனித்திருக்கையில், அவன் குற்றத்தை அவனுக்கு உணர்த்து அவன் உனக்குச் செவிகொடுத்தால், உன் சகோதரனை ஆதாயப்படுத்திக்கொண்டாய். 16 அவன் செவிகொடாமற்போனால், இரண்டு மூன்று சாட்சிகளுடைய வாக்கினாலே சங்கதிகளெல்லாம் நிலைவரப்படும்படி, இரண்டொருவரை உன்னுடனே கூட்டிக்கொண்டு போ. 17 அவர்களுக்கும் அவன் செவிகொடாமற்போனால், அதைச் சபைக்குத் தெரியப்படுத்து; சபைக்கும் செவிகொடாதிருப்பானானால், அவன் உனக்கு அஞ்ஞானியைப்போலவும் ஆயக்காரனைப்போலவும் இருப்பானாக. 18 பூலோகத்திலே நீங்கள் எவைகளைக் கட்டுவீர்களோ அவைகள் பரலோகத்திலும் கட்டப்பட்டிருக்கும்; பூலோகத்திலே நீங்கள் எவைகளைக் கட்டவிழ்ப்பீர்களோ அவைகள் பரலோகத்திலும் கட்டவிழ்க்கப்படும் என்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன். 19 அல்லாமலும், உங்களில் இரண்டுபேர் தாங்கள் வேண்டிக்கொள்ளப்போகிற எந்தக் காரியத்தைக்குறித்தாகிலும் பூமியிலே ஒருமனப்பட்டிருந்தால், பரலோகத்திலிருக்கிற என் பிதாவினால் அது அவர்களுக்கு உண்டாகும் என்று உங்களுக்குச் சொல்லுகிறேன். 20 ஏனெனில், இரண்டு பேராவது மூன்று பேராவது என் நாமத்தினாலே எங்கே கூடியிருக்கிறார்களோ, அங்கே அவர்கள் நடுவிலே இருக்கிறேன் என்றார்.*

சபை ஒருவருக்கொருவர் கணக்கு ஒப்பிவிக்கிறவர்களாக இருக்க வேண்டும். பாவம் என்பது நமது சொந்த வாழ்க்கையிலோ அல்லது திருச்சபையிலோ பொறுத்துக்கொள்ளப்படவோ, மன்னிக்கப்படவோ அல்லது ஏற்றுக்கொள்ளப்படவோ கூடாது. பாவம் நேரடியாகவும், இயேசு நிறுவிய செயல்முறையின்படியும் கையாளப்பட வேண்டும். கர்த்தரின் பிள்ளைகளாக மற்றும் பிரதிநிதிகளாக, கிறிஸ்துவுக்கு சாட்சியாக உலகிற்கு முன்பாக வாழவேண்டும்.

நாம் ஒருவருக்கொருவர் உக்கிரணகாரராக இருக்கும் போதும் , நம் வாழ்க்கையிலும் திருச்சபைக்குள்ளும் பாவங்களைச் சமாளிக்கும்போது, அவருடைய பிரசன்னம் ,ஆசீர்வாதம் நம்முடன் இருக்கும் என்று இயேசு உறுதியளிக்கிறார். அவ்வாறு செய்யத் தவறினால், சபையை பற்றிய நல்ல எண்ணம் சிதைக்கப்பட்டு கேலி செய்யப்படும், இதன் விளைவாக செயலற்ற தன்மை ஏற்படும். சபை ஒழுங்குகள் கிறிஸ்துவை நம்புவோர் இரண்டு முக்கியமான செயல்களைச் செய்ய வேண்டும் என்று வேதம் கற்பிக்கிறது. முதலாவது ஞானஸ்நானம் இரண்டாவது திருவிருந்து.

Free Digital Copy From ServeNow

## ஞானஸ்நானம்

மத்தேயு *28:18-19 ல் இயேசு தம் சீஷர்களிடம் கூறியதாவது, 18 அப்பொழுது இயேசு சமீபத்தில் வந்து, அவர்களை நோக்கி: வானத்திலும் பூமியிலும் சகல அதிகாரமும் எனக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது. 19 ஆகையால், நீங்கள் புறப்பட்டுப்போய் சகல ஜாதிகளையும் சீஷராக்கி, பிதா குமாரன் பரிசுத்த ஆவியின் நாமத்திலே அவர்களுக்கு ஞானஸ்நானங்கொடுத்து,*

ஞானஸ்நானம் என்பது கிறிஸ்துவுக்குக் கீழ்ப்படிதல் மற்றும் நாம் அவருக்குச் சொந்தமானவர்கள் என்பதற்கான சான்றாகும். இது அவருடைய மரணம் மற்றும் உயிர்த்தெழுதலில் அவரை அடையாளம் காண்பது, மேலும் கிறிஸ்து நம் பாவத்திற்காக மறுத்ததை போல பாவத்திற்கு நாம் மரிப்பதை பற்றிய காரியம் ஆகும் ; கிறிஸ்து புதிய வாழ்க்கைக்கு உயர்ந்ததைப் போல நாம் புதிய வாழ்க்கைக்கு எழுந்திருக்கிறோம்!

ரோமர் 6:3-4 *3 கிறிஸ்து இயேசுவுக்குள்ளாக ஞானஸ்நானம் பெற்ற நாமனைவரும் அவருடைய மரணத்துக்குள்ளாக ஞானஸ்நானம் பெற்றதை அறியாமலிருக்கிறீர்களா? 4 மேலும் பிதாவின் மகிமையினாலே கிறிஸ்து மரித்தோரிலிருந்து எழுப்பப்பட்டதுபோல, நாமும் புதிதான ஜீவனுள்ளவர்களாய் நடந்துகொள்ளும்படிக்கு, அவருடைய மரணத்திற்குள்ளாக்கும் ஞானஸ்நானத்தினாலே கிறிஸ்துவுடனேகூட அடக்கம்பண்ணப்பட்டோம்.*

ஞானஸ்நானம் என்பது கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவில் நம்முடைய தனிப்பட்ட நம்பிக்கையைப் பின்பற்றுவதாகும். புதிய ஏற்பாட்டில் உள்ள மாதிரி என்னவென்றால், ஒரு நபர் முதலில் கிறிஸ்துவை நம்பினார், பின்னர் அவர்கள் ஞானஸ்நானம் பெற்றனர். உதாரணமாக, அப்போஸ்தலனாகிய பவுல் அப்போஸ்தலர் 18:8 ல் நற்செய்தியைப் பகிர்ந்து கொண்டபோது, அவரைக் கேட்ட கொரிந்தியர் எத்தனை பேர் நம்பி ஞானஸ்நானம் பெற்றார்கள் என்பதைக் குறிப்பிடுகிறார்.

## கர்த்தரின் பந்தி

அப்போஸ்தலனாகிய பவுல் 1 கொரிந்தியர் 11:23-26 இல் இப்படி எழுதியுள்ளார் , 1 கொரிந்தியர் 11:23-26 *23 நான் உங்களுக்கு ஒப்புவித்ததைக் கர்த்தரிடத்தில் பெற்றுக்கொண்டேன்; என்னவெனில், கர்த்தராகிய இயேசு தாம் காட்டிக்கொடுக்கப்பட்ட அன்று இராத்திரியிலே அப்பத்தை எடுத்து, 24 ஸ்தோத்திரம்பண்ணி, அதைப்பிட்டு: நீங்கள் வாங்கிப் புசியுங்கள், இது உங்களுக்காகப் பிட்கப்படுகிற என்னுடைய*

Free Digital Copy From ServeNow



*சரீரமாயிருக்கிறது; என்னை நினைவுகூரும்படி இதைச் செய்யுங்கள் என்றார். 25 போஜனம்பண்ணினபின்பு, அவர் அந்தப்படியே பாத்திரத்தையும் எடுத்து: இந்தப் பாத்திரம் என் இரத்தத்தினாலாகிய புதிய உடன்படிக்கையாயிருக்கிறது; நீங்கள் இதைப் பானம்பண்ணும்போதெல்லாம் என்னை நினைவுகூரும்படி இதைச் செய்யுங்கள் என்றார். 26 ஆகையால் நீங்கள் இந்த அப்பத்தைப் புசித்து, இந்தப் பாத்திரத்தில் பானம்பண்ணும்போதெல்லாம் கர்த்தர் வருமளவும் அவருடைய மரணத்தைத் தெரிவிக்கிறீர்கள்.*

நமது பாவங்களுக்காக சிலுவையில் கர்த்தர் செய்த தியாகத்தை திருவிருந்து நமக்கு நினைவூட்டுகிறது. இது அவர் மீது மீண்டும் கவனம் செலுத்தவும், அவர் நமக்காக என்ன செய்தார் என்பதை நினைவில் கொள்ளவும் உதவுகிறது.

## ஒருவருக்கொருவர் சேவை செய்தல்

திருச்சபையில் அனைவருமே கிறிஸ்துவுக்குள் சகோதர சகோதரிகள் என சமநிலையில் கருதப்படவேண்டும். ரோமர் 12:6-8 *சொல்லுகிறது என்னவெனில், நமக்கு அருளப்பட்ட கிருபையின்படியே நாம் வெவ்வேறான வரங்களுள்ளவர்களானபடியினாலே, நம்மில் தீர்க்கதரிசனஞ்சொல்லுகிற வரத்தையுடையவன் விசுவாசப்பிரமாணத்துக்கேற்றதாகச் சொல்லக்கடவன். ஊழியஞ்செய்கிறவன் ஊழியத்திலும், போதிக்கிறவன் போதிக்கிறதிலும், புத்திசொல்லுகிறவன் புத்திசொல்லுகிறதிலும் தரித்திருக்கக்கடவன்; பகிர்ந்து கொடுக்கிறவன் வஞ்சனையில்லாமல் கொடுக்கக்கடவன்; முதாலாளியானவன் ஜாக்கிரதையாயிருக்கக்கடவன்; இரக்கஞ்செய்கிறவன் உற்சாகத்துடனே செய்யக்கடவன்.*

1 கொரிந்தியர் 12:27-28-ல் *இதே கருத்து தொடருகிறது, நீங்களே கிறிஸ்துவின் சரீரமாயும், தனித்தனியே அவயவங்களாயுமிருக்கிறீர்கள். தேவனானவர் சபையிலே முதலாவது அப்போஸ்தலரையும், இரண்டாவது தீர்க்கதரிசிகளையும், மூன்றாவது போதகர்களையும், பின்பு அற்புதங்களையும், பின்பு குணமாக்கும் வரங்களையும், ஊழியங்களையும், ஆளுகைகளையும், பலவித பாஷைகளையும் ஏற்படுத்தினார்.*

1 கொரிந்தியர் 13-ம் அதிகாரத்திலும்கூட, திருச்சபைக்குள்ளே ஆவிக்குரிய வரங்களை பயனுள்ள வகையிலே பயன்படுத்திடும்படி

Free Digital Copy From SeveNow

அன்பானது அனைவர் இருதயங்களிலேயும் வாசம் செய்ய வேண்டும் என்பதை கட்டளையாக கூறப்பட்டுள்ளதை 12ம் அதிகாரத்தின் தொடர்ச்சியாக காணலாம். அன்பில்லையானால் சுயநலம், ஒழுங்கின்மை, பொறாமை, மோதல் மற்றும் பல பிரச்சினைகள் உண்டாகும்.

## தலைமைத்துவம்

கடவுள் திருச்சபைக்கு தலைமைத்துவத்தை கொடுத்திருகிறார். எபிரேயர் 13:17 கூறுகிறபடி, உங்களை நடத்துகிறவர்கள், உங்கள் ஆத்துமாக்களுக்காக உத்தரவாதம்பண்ணுகிறவர்களாய் விழித்திருக்கிறவர்களானபடியால், அவர்கள் துக்கத்தோடே அல்ல, சந்தோஷத்தோடே அதைச்செய்யும்படி, அவர்களுக்குக் கீழ்ப்படிந்து அடங்குங்கள்; அவர்கள் துக்கத்தோடே அப்படிச் செய்தால் அது உங்களுக்குப் பிரயோஜனமாயிருக்கமாட்டாதே.

**புதிய ஏற்பாட்டில் "ஒருவரையொருவர்"**

1. *சுத்த இருதயத்தோடே ஒருவரிலொருவர் ஊக்கமாய் அன்புகூருங்கள்* (1 பேதுரு 1:22).

2. *ஒருவருக்கொருவர் சகோதர அன்பிலே பெருகுங்கள்* (ரோமர் 12:10).

3. *ஒருவரையொருவர் கனம் பண்ணுகிறதிலே முந்திக்கொள்ளுங்கள்* (ரோமர்12:10).

4. *ஏகசிந்தையுள்ளவர்களாயிருங்கள்.* (ரோமர் 12:16).

5. *ஒருவரையொருவர் குற்றவாளிகளென்று தீர்க்காதிருப்போமாக.* (ரோமர் 14:13).

6. *கிறிஸ்து நம்மை ஏற்றுக்கொண்டதுபோல, நீங்களும் ஒருவரையொருவர் ஏற்றுக்கொள்ளுங்கள்* (ரோமர் 15:7).

7. *ஒருவருக்கொருவர் போதித்து புத்திசொல்லிக்கொள்ளுங்கள்* (கொலோசெயர் 3:16).

8. *ஒருவருக்கொருவர் புத்திசொல்லுங்கள்* (எபிரேயர் 3:13).

9. *ஒருவருக்கொருவர் பக்திவிருத்தி உண்டாகும்படி செய்யுங்கள்* (1 தெசலோனிக்கேயர் 5:11)

10. *நீங்கள் போஜனம்பண்ணக் கூடிவரும்போது, ஒருவருக்காக ஒருவர் காத்திருங்கள்* (1 கொரிந்தியர் 11:33).

Free Digital Copy From SolveNow



11. *ஒருவருக்கொருவர்* (1 கொரிந்தியர் 12:25).

12. அன்பினாலே ஒருவொருக்கொருவர் சேவை செய்யுங்கள் (கலாத்தியர் 5:13)

13. வீண் புகழ்ச்சியை விரும்பாமலும், ஒருவரையொருவர் கோபமூட்டாமலும், ஒருவர்மேல் ஒருவர் பொறாமைகொள்ளாமலும் இருக்கக்கடவோம் (கலாத்தியர் 5:26).

14. ஒருவர் பாரத்தை ஒருவர் தாங்குங்கள் (கலாத்தியர் 6:2).

15. மிகுந்த மனத்தாழ்மையும் சாந்தமும் நீடிய பொறுமையும் உடையவர்களாயிருங்கள் (எபேசியர் 4:2)

16. ஒருவருக்கொருவர் தயவாயும் மனஉருக்கமாயும் இருங்கள் (எபேசியர் 4:32).

17. ஒருவருக்கொருவர் மன்னியுங்கள் (எபேசியர் 4:32).

18. சங்கீதங்களினாலும் கீர்த்தனைகளினாலும் ஞானப்பாட்டுகளினாலும் ஒருவருக்கொருவர் புத்திசொல்லிக்கொள்ளுங்கள் (எபேசியர் 5:19).

19. தெய்வ பயத்தோடே ஒருவருக்கொருவர் கீழ்ப்படிந்திருங்கள் (எபேசியர் 5:21).

20. மனத்தாழ்மையினாலே ஒருவரையொருவர் தங்களிலும் மேன்மையானவர்களாக எண்ணக்கடவீர்கள் (பிலிப்பியர் 2:3).

21. ஒருவொருக்கொருவர் பொய் சொல்லாதிருங்கள் (கொலோசெயர் 3:9).

22. ஒருவரையொருவர் தாங்குங்கள் ((கொலோசெயர் 3:13).

23. ஒருவரிடத்தில் ஒருவர் வைக்கும் அன்பிலும் மற்றெல்லா மனுஷரிடத்தில் வைக்கும் அன்பிலும் பெருகுங்கள் (1 தெசலோனிக்கேயர் 3:12).

24. அன்புக்கும் நற்கிரியைகளுக்கும் நாம் ஏவப்படும்படி ஒருவரையொருவர் கவனியுங்கள் (எபிரேயர் 10:24).

25. ஒருவருக்கொருவர் விரோதமாய்ப் பேசாதிருங்கள் (யாக்கோபு 4:11).

26. ஒருவருக்கொருவர் விரோதமாய் முறையிடாதிருங்கள் (யாக்கோபு 5:9).

27. உங்கள் குற்றங்களை ஒருவருக்கொருவர் அறிக்கையிடுங்கள் (யாக்கோபு 5:16).

Free Digital Copy From ServeNow



28.ஒருவருக்காக ஒருவர் ஜெபம்பண்ணுங்கள் (யாக்கோபு 5:16).

29.முறுமுறுப்பில்லாமல் ஒருவரையொருவர் உபசரியுங்கள் (1 பேதுரு 4:9).

30.பற்பல கிருபையுள்ள ஈவுகளைப் பகிர்ந்துகொடுக்கும் நல்ல உக்கிராணக்காரர்போல, ஒருவருக்கொருவர் உதவிசெய்யுங்கள் (1 பேதுரு 4:10).

31.நீங்களெல்லாரும் ஒருவருக்கொருவர் கீழ்ப்படிந்து, மனத்தாழ்மையை அணிந்துகொள்ளுங்கள் (1 பேதுரு 5:5).

32. ஒருவருடைய கால்களை ஒருவர் கழுவக்கடவீர்கள் (யோவான் 13:14).

## ஆரோக்கியமான சபையின் அடையாளங்கள்

வெளிப்படுத்தின விஷேசம் 2 மற்றும் 3-ம் அத்தியாயங்களில் அப்போஸ்தலனாகிய யோவானுக்கு அவர் காலத்திலிருந்த சபைகளுக்காக பிரத்தியேகமான செய்திகளை இயேசுவானவர் அருளினதை காணமுடியும். அந்த ஏழு சபைகளுக்கான ஏழு கடிதங்களின் வாயிலாக எது ஆரோக்கியமான சபை எது அரோக்கியமற்ற சபை என்பதை நாம் காணலாம். அந்த 2 அத்தியாயங்களிலுள்ளவற்றை கீழ்க்கண்டவாறு நாம் வாசிக்கிறோம்:

*எபேசு சபையின் தூதனுக்கு நீ எழுதவேண்டியது என்னவெனில்: ஏழு நட்சத்திரங்களைத் தம்முடைய வலதுகரத்தில் ஏந்திக்கொண்டு, ஏழு பொன் குத்துவிளக்குகளின் மத்தியிலே உலாவிக்கொண்டிருக்கிறவர் சொல்லுகிறதாவது;*

*உன் கிரியைகளையும், உன் பிரயாசத்தையும், உன் பொறுமையையும், நீ பொல்லாதவர்களைச் சகிக்கக்கூடாமலிருக்கிறதையும், அப்போஸ்தலரல்லாதவர்கள் தங்களை அப்போஸ்தலரென்று சொல்லுகிறதை நீ சோதித்து அவர்களைப் பொய்யரென்று கண்டறிந்ததையும்; நீ சகித்துக்கொண்டிருக்கிறதையும், பொறுமையாயிருக்கிறதையும், என் நாமத்தினிமித்தம் இளைப்படையாமல் பிரயாசப்பட்டதையும் அறிந்திருக்கிறேன்.*

*ஆனாலும், நீ ஆதியில் கொண்டிருந்த அன்பை விட்டாய் என்று உன்பேரில் எனக்குக் குறை உண்டு. ஆகையால், நீ இன்ன நிலைமையிலிருந்து விழுந்தாயென்பதை நினைத்து, மனந்திரும்பி, ஆதியில் செய்த கிரியைகளைச் செய்வாயாக; இல்லாவிட்டால் நான் சீக்கிரமாய் உன்னிடத்தில் வந்து, நீ மனந்திரும்பாதபட்சத்தில், உன்*

Free Digital Copy From ServeNow

*விளக்குத்தண்டை அதனிடத்தினின்று நீக்கிவிடுவேன். நான் வெறுக்கிற நிக்கொலாய் மதஸ்தரின் கிரியைகளை நீயும் வெறுக்கிறாய், இது உன்னிடத்திலுண்டு.*

*ஆவியானவர் சபைகளுக்குச் சொல்லுகிறதைக் காதுள்ளவன் கேட்கக்கடவன்; ஜெயங்கொள்ளுகிறவனெவனோ அவனுக்கு தேவனுடைய பரதீசின் மத்தியிலிருக்கிற ஜீவவிருட்சத்தின் கனியைப் புசிக்கக்கொடுப்பேன் என்றெழுது.*

*சிமிர்னா சபையின் தூதனுக்கு நீ எழுதவேண்டியது என்னவெனில்: முந்தினவரும் பிந்தினவரும், மரித்திருந்து பிழைத்தவருமானவர் சொல்லுகிறதாவது; உன் கிரியைகளையும், உன் உபத்திரவத்தையும், நீ ஐசுவரியமுள்ளவனாயிருந்தும் உனக்கிருக்கிற தரித்திரத்தையும், தங்களை யூதரென்று சொல்லியும் யூதராயிராமல் சாத்தானுடைய கூட்டமாயிருக்கிறவர்கள் செய்யும் தூஷணத்தையும் அறிந்திருக்கிறேன். நீ படப்போகிற பாடுகளைக்குறித்து எவ்வளவும் பயப்படாதே; இதோ, நீங்கள் சோதிக்கப்படும்பொருட்டாகப் பிசாசானவன் உங்களில் சிலரைக் காவலில் போடுவான்; பத்துநாள் உபத்திரவப்படுவீர்கள். ஆகிலும் நீ மரணபரியந்தம் உண்மையாயிரு, அப்பொழுது ஜீவகிரீடத்தை உனக்குத் தருவேன்.*

*ஆவியானவர் சபைகளுக்குச் சொல்லுகிறதைக் காதுள்ளவன் கேட்கக்கடவன்; ஜெயங்கொள்ளுகிறவன் இரண்டாம் மரணத்தினால் சேதப்படுவதில்லை என்றெழுது.*

*பெர்கமு சபையின் தூதனுக்கு நீ எழுதவேண்டியது என்னவெனில்: இருபுறமும் கருக்குள்ள பட்டயத்தை உடையவர் சொல்லுகிறதாவது; உன் கிரியைகளையும், சாத்தானுடைய சிங்காசனமிருக்கிற இடத்தில் நீ குடியிருக்கிறதையும், நீ என் நாமத்தைப் பற்றிக்கொண்டிருக்கிறதையும், சாத்தான் குடிகொண்டிருக்கிற இடத்திலே உங்களுக்குள்ளே எனக்கு உண்மையுள்ள சாட்சியான அந்திப்பா என்பவன் கொல்லப்பட்ட நாட்களிலும் என்னைப் பற்றும் விசுவாசத்தை நீ மறுதலியாமலிருந்ததையும் அறிந்திருக்கிறேன்.*

*ஆகிலும், சில காரியங்களைக்குறித்து உன்பேரில் எனக்குக் குறை உண்டு; விக்கிரகங்களுக்குப் படைத்தவைகளைப் புசிப்பதற்கும் வேசித்தனம்பண்ணுவதற்கும் ஏதுவான இடறலை இஸ்ரவேல் புத்திரர் முன்பாகப் போடும்படி பாலாக் என்பவனுக்குப் போதனை செய்த பிலேயாமுடைய போதகத்தைக் கைக்கொள்ளுகிறவர்கள் உன்னிடத்திலுண்டு. அப்படியே நிக்கொலாய் மதஸ்தருடைய போதகத்தைக் கைக்கொள்ளுகிறவர்களும் உன்னிடத்திலுண்டு; அதை நான் வெறுக்கிறேன். நீ மனந்திரும்பு, இல்லாவிட்டால் நான்*

Free Digital Copy From SeveNow



*சீக்கிரமாய் உன்னிடத்தில் வந்து, என் வாயின் பட்டயத்தால் அவர்களோடே யுத்தம்பண்ணுவேன்.*

*ஆவியானவர் சபைகளுக்குச் சொல்லுகிறதைக் காதுள்ளவன் கேட்கக்கடவன்; ஜெயங்கொள்ளுகிறவனுக்கு நான் மறைவான மன்னாவைப் புசிக்கக்கொடுத்து, அவனுக்கு வெண்மையான குறிக்கல்லையும், அந்தக் கல்லின்மேல் எழுதப்பட்டதும் அதைப் பெறுகிறவனேயன்றி வேறொருவனும் அறியக்கூடாததுமாகிய புதிய நாமத்தையும் கொடுப்பேன் என்றெழுது.*

*தியத்தீரா சபையின் தூதனுக்கு நீ எழுதவேண்டியது என்னவெனில்: அக்கினிஜுவாலை போன்ற கண்களும், பிரகாசமான வெண்கலம்போன்ற பாதங்களுமுள்ள தேவகுமாரன் சொல்லுகிறதாவது; உன் கிரியைகளையும், உன் அன்பையும், உன் ஊழியத்தையும், உன் விசுவாசத்தையும், உன் பொறுமையையும், நீ முன்பு செய்த கிரியைகளிலும் பின்புசெய்த கிரியைகள் அதிகமாயிருக்கிறதையும் அறிந்திருக்கிறேன்.*

*ஆகிலும், உன்பேரில் எனக்குக் குறை உண்டு; என்னவெனில், தன்னைத் தீர்க்கதரிசியென்று சொல்லுகிற யேசபேல் என்னும் ஸ்திரீயானவள் என்னுடைய ஊழியக்காரர் வேசித்தனம்பண்ணவும் விக்கிரகங்களுக்குப் படைத்தவைகளைப் புசிக்கவும் அவர்களுக்குப் போதித்து, அவர்களை வஞ்சிக்கும்படி நீ அவளுக்கு இடங்கொடுக்கிறாய். அவள் மனந்திரும்பும்படியாய் அவளுக்குத் தவணைகொடுத்தேன்; தன் வேசிமார்க்கத்தை விட்டு மனந்திரும்ப அவளுக்கு விருப்பமில்லை. இதோ, நான் அவளைக் கட்டில்கிடையாக்கி, அவளுடனே விபசாரஞ்செய்தவர்கள் தங்களுடைய கிரியைகளைவிட்டு மனந்திரும்பாவிட்டால் அவர்களையும் மிகுந்த உபத்திரவத்திலே தள்ளி, அவளுடைய பிள்ளைகளையும் கொல்லவே கொல்லுவேன்; அப்பொழுது நானே உள்ளிந்திரியங்களையும் இருதயங்களையும் ஆராய்கிறவரென்று எல்லாச் சபைகளும் அறிந்துகொள்ளும்; அன்றியும் உங்களில் ஒவ்வொருவனுக்கும் உங்கள் கிரியைகளின்படியே பலனளிப்பேன்.*

*தியத்தீராவிலே இந்தப் போதகத்தைப் பற்றிக்கொள்ளாமலும், சாத்தானுடைய ஆழங்கள் என்று அவர்கள் சொல்லுகிறார்களே, அந்த ஆழங்களை அறிந்துகொள்ளாமலுமிருக்கிற மற்றவர்களாகிய உங்களுக்கு நான் சொல்லுகிறதாவது: உங்கள்மேல் வேறொரு பாரத்தையும் சுமத்தமாட்டேன். உங்களுக்குள்ளதை நான் வருமளவும் பற்றிக்கொண்டிருங்கள்.*

*ஜெயங்கொண்டு முடிவுபரியந்தம் என் கிரியைகளைக் கைக்கொள்ளுகிறவனெவனோ அவனுக்கு, நான் என் பிதாவினிடத்தில் அதிகாரம் பெற்றதுபோல, ஜாதிகள்மேல் அதிகாரம்*

Free Digital Copy From ServeNow



*கொடுப்பேன். அவன் இருப்புக்கோலால் அவர்களை ஆளுவான்; அவர்கள் மண்பாண்டங்களைப்போல நொறுக்கப்படுவார்கள். விடிவெள்ளி நட்சத்திரத்தையும் அவனுக்குக் கொடுப்பேன்.*

*ஆவியானவர் சபைகளுக்குச் சொல்லுகிறதைக் காதுள்ளவன் கேட்கக்கடவன் என்றெழுது.*

*சர்தை சபையின் தூதனுக்கு நீ எழுதவேண்டியது என்னவெனில்: தேவனுடைய ஏழு ஆவிகளையும் ஏழு நட்சத்திரங்களையும் உடையவர் சொல்லுகிறதாவது; உன் கிரியைகளை அறிந்திருக்கிறேன், நீ உயிருள்ளவனென்று பெயர்கொண்டிருந்தும் செத்தவனாயிருக்கிறாய். நீ விழித்துக்கொண்டு, சாகிறதற்கேதுவாயிருக்கிறவைகளை ஸ்திரப்படுத்து; உன் கிரியைகள் தேவனுக்குமுன் நிறைவுள்ளவைகளாக நான் காணவில்லை. ஆகையால் நீ கேட்டுப் பெற்றுக்கொண்ட வகையை நினைவுகூர்ந்து, அதைக் கைக்கொண்டு மனந்திரும்பு. நீ விழித்திராவிட்டால், திருடனைப்போல் உன்மேல் வருவேன்; நான் உன்மேல் வரும்வேளையை அறியாதிருப்பாய்.*

*ஆனாலும் தங்கள் வஸ்திரங்களை அசுசிப்படுத்தாத சிலபேர் சர்தையிலும் உனக்குண்டு; அவர்கள் பாத்திரவான்களானபடியால் வெண்வஸ்திரந்தரித்து என்னோடேகூட நடப்பார்கள். ஜெயங்கொள்ளுகிறவனெவனோ அவனுக்கு வெண்வஸ்திரம் தரிப்பிக்கப்படும்; ஜீவபுஸ்தகத்திலிருந்து அவனுடைய நாமத்தை நான் கிறுக்கிப்போடாமல், என் பிதா முன்பாகவும் அவருடைய தூதர் முன்பாகவும் அவன் நாமத்தை அறிக்கையிடுவேன். ஆவியானவர் சபைகளுக்குச் சொல்லுகிறதைக் காதுள்ளவன் கேட்கக்கடவன் என்றெழுது.*

*பிலதெல்பியா சபையின் தூதனுக்கு நீ எழுதவேண்டியது என்னவெனில்: பரிசுத்தமுள்ளவரும், சத்தியமுள்ளவரும், தாவீதின் திறவுகோலை உடையவரும், ஒருவரும் பூட்டக்கூடாதபடிக்குத் திறக்கிறவரும், ஒருவரும் திறக்கக்கூடாதபடிக்குப் பூட்டுகிறவருமாயிருக்கிறவர் சொல்லுகிறதாவது; உன் கிரியைகளை அறிந்திருக்கிறேன்; உனக்குக் கொஞ்சம் பெலன் இருந்தும், நீ என் நாமத்தை மறுதலியாமல், என் வசனத்தைக் கைக்கொண்டபடியினாலே, இதோ, திறந்தவாசலை உனக்கு முன்பாக வைத்திருக்கிறேன், அதை ஒருவனும் பூட்டமாட்டான். இதோ, யூதரல்லாதிருந்தும் தங்களை யூதரென்று பொய் சொல்லுகிறவர்களாகிய சாத்தானுடைய கூட்டத்தாரில் சிலரை உனக்குக் கொடுப்பேன்; இதோ, அவர்கள் உன் பாதங்களுக்கு முன்பாக*

Free Digital Copy From ServeNow



*வந்து பணிந்து, நான் உன்மேல் அன்பாயிருக்கிறதை அறிந்துகொள்ளும்படி செய்வேன்.*

*என் பொறுமையைக்குறித்துச் சொல்லிய வசனத்தை நீ காத்துக்கொண்டபடியினால், பூமியில் குடியிருக்கிறவர்களைச் சோதிக்கும்படியாகப் பூச்சக்கரத்தின்மேலெங்கும் வரப்போகிற சோதனைக்காலத்திற்குத் தப்பும்படி நானும் உன்னைக் காப்பேன்.*

*இதோ, சீக்கிரமாய் வருகிறேன்; ஒருவனும் உன் கிரீடத்தை எடுத்துக்கொள்ளாதபடிக்கு உனக்குள்ளதைப் பற்றிக்கொண்டிரு. ஜெயங்கொள்ளுகிறவனெவனோ அவனை என் தேவனுடைய ஆலயத்திலே தூணாக்குவேன், அதினின்று அவன் ஒருக்காலும் நீங்குவதில்லை; என் தேவனுடைய நாமத்தையும் என் தேவனால் பரலோகத்திலிருந்திறங்கிவருகிற புதிய எருசலேமாகிய என் தேவனுடைய நகரத்தின் நாமத்தையும், என் புதிய நாமத்தையும் அவன்மேல் எழுதுவேன். ஆவியானவர் சபைகளுக்குச் சொல்லுகிறதைக் காதுள்ளவன் கேட்கக்கடவன் என்றெழுது.*

*லவோதிக்கேயா சபையின் தூதனுக்கு நீ எழுதவேண்டியது என்னவெனில்: உண்மையும் சத்தியமுமுள்ள சாட்சியும், தேவனுடைய சிருஷ்டிக்கு ஆதியுமாயிருக்கிற ஆமென் என்பவர் சொல்லுகிறதாவது; உன் கிரியைகளை அறிந்திருக்கிறேன்; நீ குளிருமல்ல அனலுமல்ல; நீ குளிராயாவது அனலாயாவது இருந்தால் நலமாயிருக்கும். இப்படி நீ குளிருமின்றி அனலுமின்றி வெதுவெதுப்பாயிருக்கிறபடியினால் உன்னை என் வாயினின்று வாந்திபண்ணிப்போடுவேன்.*

*நீ நிர்ப்பாக்கியமுள்ளவனும், பரிதபிக்கப்படத்தக்கவனும், தரித்திரனும், குருடனும், நிர்வாணியுமாயிருக்கிறதை அறியாமல், நான் ஐசுவரியவானென்றும், திரவியசம்பன்னனென்றும், எனக்கு ஒரு குறைவுமில்லையென்றும் சொல்லுகிறபடியால்; நான்: நீ ஐசுவரியவானாகும்படிக்கு நெருப்பிலே புடமிடப்பட்ட பொன்னையும், உன் நிர்வாணமாகிய அவலட்சணம் தோன்றாதபடிக்கு நீ உடுத்திக்கொள்வதற்கு வெண்வஸ்திரங்களையும் என்னிடத்திலே வாங்கிக்கொள்ளவும், நீ பார்வையடையும்படிக்கு உன் கண்களுக்குக் கலிக்கம்போடவும் வேண்டுமென்று உனக்கு ஆலோசனை சொல்லுகிறேன்.*

*நான் நேசிக்கிறவர்களெவர்களோ அவர்களைக் கடிந்துகொண்டு சிட்சிக்கிறேன்; ஆகையால் நீ ஜாக்கிரதையாயிருந்து, மனந்திரும்பு. இதோ, வாசற்படியிலே நின்று தட்டுகிறேன்; ஒருவன் என் சத்தத்தைக்கேட்டு, கதவைத் திறந்தால், அவனிடத்தில் நான் பிரவேசித்து, அவனோடே போஜனம்பண்ணுவேன், அவனும் என்னோடே போஜனம்பண்ணுவான்.*

Free Digital Copy From SaveNow



*நான் ஜெயங்கொண்டு என் பிதாவினுடைய சிங்காசனத்திலே அவரோடேகூட உட்கார்ந்ததுபோல, ஜெயங்கொள்ளுகிறவனெவனோ அவனும் என்னுடைய சிங்காசனத்தில் என்னோடேகூட உட்காரும்படிக்கு அருள்செய்வேன். ஆவியானவர் சபைகளுக்குச் சொல்லுகிறதைக் காதுள்ளவன் கேட்கக்கடவன் என்றெழுது என்றார்.*

மேற்கண்ட பகுதிகளில் உள்ள நேர்மறையான கருத்துக்களிலிருந்து துவங்குவோம்!

**எபேசு - கிரியைகள், விடாமுயற்சி, பகுத்தறிதல், அர்ப்பணிப்பு**

இயேசுவானவர் முதலாவது அவர்களின் நற்குணங்களைப் பாராட்டுகிறார். ஆரோக்கியமான சபையின் ஒரு முக்கியமான அடையாளங்களில் ஒன்று அவர்களின் சேவை மன்ப்பான்மையாகும். இயேசுவானவரும் கூட ஊழியம் கொள்ளும்படி வராமல் ஊழியம் செய்யும்படி வந்தார் என்பதையே ஒரு ஆரோக்கியமான திருச்சபையும் பின்பற்றிட மாதிரியாக்கப்பட்டுள்ளது. இது ஒரு சபையின் செயல்பாடாக இருக்க வேண்டும்.

இரண்டாவதாக, இயேசுவானவர் எபேசு சபையின் கடின உழைப்பையும், விடாமுயற்சி அல்லது அவர்தம் ஜாக்கிரதை மற்றும் ஒழுக்கம் ஆகியவற்றைப் பாராட்டுகிறார். ஆரோக்கியமான சபையின் அடுத்த அடையாளங்களில் ஒன்று ஆவிக்குரிய செயல்பாடுகளில் சோம்பலற்ற தன்மை. இதனால் கடவுளின் கிருபைகளை அடைவதோடுல்லாமல், கடவுள் அவர்களுக்காய் செயலாற்றுவதோடு அவர்கள் மூலமாகவும் செயலாற்றுகிறவராயிருக்கிறார்.

*ஆதலால், எனக்குப் பிரியமானவர்களே, நீங்கள் எப்பொழுதும் கீழ்ப்படிகிறபடியே, நான் உங்களுக்குச் சமீபமாயிருக்கும்பொழுது மாத்திரமல்ல, நான் தூரமாயிருக்கிற இப்பொழுதும், அதிக பயத்தோடும் நடுக்கத்தோடும் உங்கள் இரட்சிப்பு நிறைவேறப் பிரயாசப்படுங்கள். ஏனெனில் தேவனே தம்முடைய தயவுள்ள சித்தத்தின்படி விருப்பத்தையும் செய்கையையும் உங்களில் உண்டாக்குகிறவராயிருக்கிறார்.* (பிலிப்பியர் 2:12-13). ஆரோக்கியமான சபை என்பது தொடர்ச்சியாக வளரவும் சேவை செய்கிறதாகவும் இருத்தல் வேண்டும்.

மூன்றாவதாக, எபேசு சபையின் தெளிந்த புத்தியுள்ள செயல்படுகளுக்காய் இயேசுவானவரால் பாராட்டப்பெறுகிறது. அவர்கள் கிறிஸ்துவின் பெயரால் சொல்லப்படும் எதையும் எவர் சொன்னாலும் கண்மூடித்தனமாக ஏற்றுக்கொள்வதில்லை. கிறிஸ்துவின் பெயரால் சொல்லப்படும் அனைத்தையும்

Free Digital Copy From ServeNow

சோதித்துப்பார்த்து, அவற்றில் தவறேதுமிருப்பின் அவற்றைப் பொறுத்துக்கொண்டதில்லை. ஆரோக்கியமான சபையானது இவ்வாறாக பகுத்தாய்ந்து, எல்லாருமே கிறிஸ்துவினால்தான் அனுப்பப்படுகிறார்களா என்பதை திறனாய்வுக்கு உட்படுத்தவேண்டும். மத்தேயு 24:4 மற்றும் பிற பகுதிகளிலும் 'ஒருவரும் உங்களை மோசம் போக்காதபடிக்கு எச்சரிக்கையாயிருங்கள்' என்பதாக இயேசுவானவராலே எச்சரிக்கப்படுகிறோம்.

நான்காவதாக, எபேசு சபை அதன் அர்ப்பணிப்புள்ள வாழ்வுக்காக இயேசுவானவரால் பாராட்டுப்பெறுகிறது. கிறிஸ்துவுக்கு தன்னை அர்ப்பணித்தபடியினாலே ஏற்படும் உபத்திரவங்களிலேயும் அச்சபை தளர்ந்து போகவில்லை. அதுபோலவே, ஒரு ஆரோக்கியமான சபையானது தான் சந்திக்கும் எதிர்ப்புகள், கடினப்பாடுகள் மற்றும் உபத்திரவங்கள் ஆகியவற்றினாலே ஒருபோதும் தனது உண்மைத்தன்மையிலிருந்து விலகி அழுத்தத்திற்குள்ளாகவோ அல்லது ஒத்துப்போகும் செயலுக்கோ சென்று விடலாகாது. கிறிஸ்துவுடன் இணைந்திருக்கும்போது இவ்வாறான எதிர்ப்புகள், கஷ்டங்கள், உபத்திரவங்கள் ஆகியவற்றை எதிர்கொள்வதும் சகிப்பதும் நேரிடும்.

## சிமிர்னா - உண்மைத்தன்மை

சிமிர்னா சபையானது வெளிப்படையாக எவ்வித பரிபூரணத்தாலோ, செழிப்பாலோ நிறைந்து வழியவில்லை. ஆயினும்கூட அவர்களின் கடும் உபத்திரவத்திலும், வறுமையிலும் அவர்கள் ஆவிக்குரிய செழிப்புடையவர்களாய் இருந்தார்கள் என இயேசுவானவராலே பாராட்டுப்பெறுகிறார்கள். ஆரோக்கியமான சபை என்பது எவ்விதமான வெளிப்பிரகாரமான சூழல்களினாலும் பாதிப்படையாது தமது உண்மைத்தன்மையைக் காத்துக்கொள்ளும்.

## பெர்கமு - அர்ப்பணம்

சாத்தான் குடிகொண்டிருக்கிற இடத்திலே குடியிருக்கும்படியான சூழலிலும் பெர்கமு சபையானது கடவுளின் நாமத்தைப் இறுகப்பற்றிக்கொண்டு வாழ்ந்தபடியினால் இயேசுவானவரால் பாராட்டப்படுகிறது. மேலும் அவர்களிலொருவனாகிய அந்திப்பா என்பவன் கிறிஸ்துவின்மேலுள்ள விசுவாசத்தை மறுதலியாமல், கிறிஸ்துவினிமித்தம் மரணத்தை எதிர்கொண்டதையும் இயேசுவானவர் பாராட்டுகிறார்.

## தியத்தீரா - பக்தி

Free Digital Copy From SaveNow

உன் கிரியைகளையும், உன் அன்பையும், உன் ஊழியத்தையும், உன் விசுவாசத்தையும், உன் பொறுமையையும், நீ முன்பு செய்த கிரியைகளிலும் பின்புசெய்த கிரியைகள் அதிகமாயிருக்கிறதையும் அறிந்திருக்கிறேன் என தியத்தீரா சபையைக் குறித்து இயேசுவானவர் உறுதிப்படுத்துகிறார். ஆரோக்கியமான சபை என்பது தனது செயல்பாடுகளினாலே கடவுள் மீதுள்ள தமது பக்தியை வெளிப்படுத்த அழைக்கப்படுகிறது. ஆரோக்கியமான சபை என்பது தமது ஆர்வம் மற்றும் கிரியைகளை அதிகப்படுத்தி தொடர்ந்து விடாமுயற்சியிலும், சேவைகளிலும் வளர்ந்து பெருக வேண்டும்.

## சர்தை - தூய்மை

இயேசுவானவர் சர்தை சபையினை முழுவதுமாக சீர்படுத்திட விரும்பும் அதேவேளையில் தங்கள் வஸ்திரங்களை அசுசிப்படுத்தாத சிலபேர் சர்தையிலும் உனக்குண்டு; அவர்கள் பாத்திரவான்களானபடியால் வெண்வஸ்திரந்தரித்து என்னோடேகூட நடப்பார்கள் என அவர்களின் உண்மைச் செயல்பாடுகளையும் மெச்சுகிறார்.

## பிலதெல்பியா - விடாமுயற்சி

சோதனைகளின்போது பொறுமையோடு தனது விசுவாத்தை காத்துக்கொண்டதற்காக இயேசுவானவராலே இந்த சபை பாராட்டுப்பெறுகிறது. இயேசுவானவர் கூறுகிறார்: *உன் கிரியைகளை அறிந்திருக்கிறேன்; உனக்குக் கொஞ்சம் பெலன் இருந்தும், நீ என் நாமத்தை மறுதலியாமல், என் வசனத்தைக் கைக்கொண்டபடியினாலே, இதோ, திறந்தவாசலை உனக்கு முன்பாக வைத்திருக்கிறேன், அதை ஒருவனும் பூட்டமாட்டான். என் பொறுமையைக்குறித்துச் சொல்லிய வசனத்தை நீ காத்துக்கொண்டபடியினால், பூமியில் குடியிருக்கிறவர்களைச் சோதிக்கும்படியாகப் பூச்சக்கரத்தின்மேலெங்கும் வரப்போகிற சோதனைக்காலத்திற்குத் தப்பும்படி நானும் உன்னைக் காப்பேன்.*

ஆரோக்கியமான சபை என்பது பிரபலமில்லாதிருந்தாலும் அல்லது விசுவாசிகள் அதினிமித்தம் துன்புறுத்தப்பட்டாலும் கடவுளின் வார்த்தைகளை உறுதியாய்ப் பிடித்துக்கொண்டிருக்கும். இயேசுவை சார்ந்திருப்பதினால் வரும் துன்பங்கள் அல்லது பின்விளைவுகளுக்காய் அவரை ஒருபோதும் மறுதலியாது. அவர்கள் பலவீனரைப் போல உணர்ந்தாலும் இயேசுவைப் பற்றிக் கொண்டிருப்பதால் உறுதியோடிருப்பார்கள்.

## லவோதிக்கேயா - தாழ்மை மற்றும் வேட்கை(ஆவல்)

Free Digital Copy From SaveNow

லவோதிக்கேயா சபையைக்குறித்து இயேசுவானவர் நேர்மறையான பாராட்டுக்கள் எதையும் குறிப்பிடவில்லை. ஏனெனில், அவர்கள் தன்னிலை மறந்தவர்களாய் பெருமை, வஞ்சனை, மாறுபாடு மற்றும் குருட்டாட்டமுள்ளவர்களாய் மெய்யான ஆவிக்குரிய வாழ்விலிருந்து வஞ்சிக்கப்பட்டதை அறியாமல் வழிதவறி வாழ்ந்து வந்தார்கள்.

ஆரோக்கியமான சபையானது எச்சூழலிலும் கடவுள் மீது பற்றுறுதி கொண்டு அவரையே தமது ஆவலாக, வேட்கையாக கொண்டு வாழவேண்டும். உலக சம்பத்துக்களால் நிறைந்திருப்பதுவே ஆவிக்குரிய ஆசீர்வாதங்கள் என கருதிவிடக்கூடாது.

இனி எதிர்மறையான விசயங்கள் என்னவென்று காண்போம் பாவத்தை அறிக்கை செய்தலும் மனம்திரும்புதலும் ஆரோக்கியமான சபைக்கு இன்றியமையாததாகும்.

## எபேசு - நீ ஆதியிலிருந்த அன்பை விட்டுவிட்டாய்

எபேசுவிலிருந்த சபையானது எல்லாவற்றையும் சரியாய் செய்தது. இயேசுவானவர் அநேக விசயங்களுக்காக அவர்களைப் பாராட்டுகிறார். ஆயினும், கடவுள் மீதிருந்த ஆதி அன்பை மறந்து சாதரணமான வாழ்க்கைப் பயணத்திலே பயணித்துவருவதை இயேசுவானவர் குறிப்பிட்டுக்காட்டுகிறார். இயேசுவின் மீதிருக்கவேண்டிய தீராத வேட்கையை, ஆவலை இழந்து போனார்கள்.

அதனை சரிசெய்வதற்கான தீர்வும் அங்கே கொடுக்கப்பட்டுள்ளது. ஆகையால், நீ இன்ன நிலைமையிலிருந்து விழுந்தாயென்பதை நினைத்து, மனந்திரும்பி, ஆதியில் செய்த கிரியைகளைச் செய்வாயாக. மனம்திரும்பி இயேசுவின்மீது ஆதியிலிருந்த அதே அன்பை மறுபடியும் கொண்டுவாழ இங்கே நாம் நினைவூட்டப்படுகிறோம். அப்படிச் செய்யாத பட்சத்தில் விளக்குத்தண்டு அதிலிருந்து அகற்றப்படும் என்கிற எச்சரிக்கையும் இங்கே நினைவூட்டப்படுகிறது. இயேசுவின்மீது தீராத வேட்கையும், ஆவலும் இழக்கும்போது நம்மிலே வலிமைகுன்றி, கனியற்றவர்களாய் மாறி புகழிலந்துவிடுவோம்.

## சிமிர்னா - பயம்

சிமிர்னா சபையைக் குறித்து இயேசுவானவர் எவ்வித குற்றச்சாட்டுக்களையும் கூறாமல் நீ படப்போகிற பாடுகளைக் குறித்து எவ்வளவும் பயப்படாதே என்று அதை ஊக்கப்படுத்தியும் உணர்த்தியும் பேசுகிறார். ஆரோக்கியமான மற்றும் உண்மையுள்ள

Free Digital Copy From ServeNow



ஒரு சபையானது கவனமற்றிருக்கும்போது பயம் என்ற காரியம் ஒரு புலசாலியைக்கூட முடமாக்கி செயலற்றுப் போகச்செய்திடும். ஆயினும் என்ன வந்தாலும் எது வந்தாலும் பயப்படாமல் இயேசுவின்மீது மாத்திரம் உறுதியோடிருக்க அவர் அழைப்புக்கொடுக்கிறார்.

ஆரோக்கியமான சபை என்பது கிறிஸ்துவின் சாட்சியாய் வாழும்போது பலம் மிக்கதும், தைரியம் நிறைந்ததுமாயிருக்கும். நாம் அவ்வித தைரியத்திற்காக மன்றாடுதல் அவசியம். அப்போஸ்தலனாகிய பவுலும்கூட பலமும் தைரியமும் கிடைத்திட வேண்டி ஜெபிக்குமபடி கேட்டார். எபேசியர் 6: 19 - 20 நமக்கு குறிப்பிடுவது, சுவிசேஷத்திற்காகச் சங்கிலியால் கட்டப்பட்டிருக்கிற ஸ்தானாபதியாகிய நான் அதைப்பற்றிப் பேசவேண்டியபடி தைரியமாய்ப் பேசத்தக்கதாக, நான் தைரியமாய் என் வாயைத் திறந்து சுவிசேஷத்தின் இரகசியத்தை அறிவிக்கிறதற்கு வாக்கு எனக்கு கொடுக்கப்படும்படி எனக்காகவும் விண்ணப்பம்பண்ணுங்கள்.

## பெர்கமு - சிலை வணக்கம் மற்றும் ஒழுக்கக் கேடு

பெர்கமு சபையாரிடையே காணப்பட்ட சிலை வழிபாடு மற்றும் பாலியல் ஒழுக்கக்கேடுள்ள வாழ்வைக் குறித்து இயேசுவானவர் கண்டித்துணர்த்துகிறார். அவர்கள் உலகத்தோடு ஒத்துப்போகிற வாழ்வை வாழ்ந்துவந்தார்கள். அவர்கள் பிற சமயக் கடவுள்களை உயர்த்தும் செயல்பாடுகளிலே பங்கெடுத்தும், பாலியல் ஒழுக்கக்கேடுகளில் ஈடுபட்டும் வந்தனர். இவ்விதமான செயல்களிலிருந்து விலகியிருப்பது நமக்கு மிகவும் அவசியமானது. *நாம் நம்மைச் சுற்றியிருக்கிற உலகம் சார்ந்த செயல்பாடுகளிலிருந்து விலகியிருந்து, நமது மனம் புதிதாகிறதினாலே மறுரூபமடைந்து வாழும் வாழ்வை வாழ வேண்டும்* (ரோமர் 12:1-2).

## தியத்தீரா-புரட்டுப்போதனையாளர்களைச் சகித்துக்கொள்ளுதல்

தியத்தீரா சபையின் பிரச்சினை என்னவென்றால் விக்கிரக வழிபாட்டுச்செயல்பாடுகளில் தங்களை ஈடுபடுத்திக்கொண்டும், பாலியல் சீர்கேடுகளைச் செய்து கொண்டும் வாழ்ந்ததோடல்லாமல், சபையிலே பல்வேறு கள்ள உபதேசங்களை போதித்து சபையை தவறாக வழிநடத்தினவர்களைப் பொறுத்துகொண்டும் இருந்ததுமாகும். மக்களுக்கு தவறான போதனைகளைக் கொடுத்து அவர்களை பாவ வழிக்கு நேராக நடத்துகிறவர்களை சபை ஒருபோதும் பொறுத்துக்கொள்ளக்கூடாது.

Free Digital Copy From SeveNow

## சர்தை - ஆவிக்குரிய சோம்பல்

சர்தை சபையானது உயிருள்ளதைப் போன்று காட்சியளித்தாலும் உண்மையில் அது செத்த நிலைமையில் இருந்ததாக இயேசுவானவர் கூறுகிறார். அச்சபையை தூக்கத்தைவிட்டு எழவும் சாகிறதற்கேதுவானவைகளிலிருந்து விடுபட்டு ஸ்திரப்படவும் அழைப்புக்கொடுக்கிறார். மேலும் அந்த சபையானது தான் கேட்டுப் பெற்றுக்கொண்ட வகையை நினைவுகூர்ந்து அதனைக் கைக்கொண்டு மனந்திரும்பிடவும் எச்சரிக்கிறார்.

ஆரோக்கியமான சபையின் அங்கத்தினர்கள் வெறுமனே இறைவார்த்தைகளை கேட்பவர்களாயில்லாமல், அதனை செயல்படுத்துகிறவர்களாயிருத்தல் வேண்டும். இயேசுவை வெறுமனே ஆண்டவர் என்று மாத்திரம் சொல்கிறவர்களாயிராமல், ஆண்டவர் இயேசுவுக்கு கீழ்ப்படிகிறவர்களாயிருக்க வேண்டும்.

## பிலதெல்பியா - ஊக்கமின்மை

பிலதெல்பியா சபையை சீர்செய்யும்படியான எந்தவித காரணத்தையும் இயேசுவானவர் காணவில்லை. மாறாக, ஒருவனும் உன் கிரீடத்தை எடுத்துக்கொள்ளாதபடிக்கு உனக்குள்ளதைப் பற்றிக்கொண்டிரு என்பதாக அவர்களை ஊக்கப்படுத்துகிறார். இந்நாட்களிலே மாய்மாலக்காரர்கள் மற்றும் பொய்யர்களின் சூழ்ச்சிகளினாலே சபையானது ஒருவிதமான உற்சாகமின்மையாலும், பின்மாற்ற நிலைமையிலும் சோதனைக்குள்ளாக்கப்பட்டுவருகிறது. இச்சூழலில் இயேசுவானவர் கொடுக்கும் அழைப்பு என்னவெனில், ஒருபோதும் இவ்விதமான சூழல்களினாலோ, சோர்ந்துபோகச்செய்யும் செயல்பாடுகளினாலோ துவண்டுவிடாமல், ஆண்டவர் மீது கொண்டுள்ள சாட்சி வாழ்வை விடாமுயற்சியோடு தொடர்ந்திட ஆண்டவர் அழைப்புக்கொடுக்கிறார்.

## லவோதிக்கேயா - ஆவிக்குரிய மந்தநிலை

லவோதிக்கேயா சபையானது தன் ஆவிக்குரிய மந்தநிலையிருந்து விடுபட்டு வாழும் வாழ்வைக்குறித்து கீழ்க்கண்டவாறு ஆலோசனைதரப்பட்டுள்ளது.

*நீ ஐசுவரியவானாகும்படிக்கு நெருப்பிலே புடமிடப்பட்ட பொன்னையும், உன் நிர்வாணமாகிய அவலட்சணம் தோன்றாதபடிக்கு நீ உடுத்திக்கொள்வதற்கு வெண்வஸ்திரங்களையும் என்னிடத்திலே வாங்கிக்கொள்ளவும், நீ பார்வையடையும்படிக்கு உன் கண்களுக்குக்*

Free Digital Copy From SaveNow

*கலிக்கம்போடவும் வேண்டுமென்று உனக்கு ஆலோசனை சொல்லுகிறேன். நான் நேசிக்கிறவர்களெவர்களோ அவர்களைக் கடிந்துகொண்டு சிட்சிக்கிறேன்; ஆகையால் நீ ஜாக்கிரதையாயிருந்து, மனந்திரும்பு. இதோ, வாசற்படியிலே நின்று தட்டுகிறேன்; ஒருவன் என் சத்தத்தைக்கேட்டு, கதவைத் திறந்தால், அவனிடத்தில் நான் பிரவேசித்து, அவனோடே போஜனம்பண்ணுவேன், அவனும் என்னோடே போஜனம்பண்ணுவான்.*

## ஆரோக்கியமான சபை என்பது மேற்கொள்ளும் சபை

ஆரோக்கியமான சபை என்றால் ஒருபோதும் பிரச்சினைகளை சந்திக்காத சபை என்று அர்த்தமல்ல; மாறாக பிரச்சினைகளை எதிர்கொண்டு அவற்றை கடவுளின் ஒத்தாசையால் மேற்கொள்ளுகிற சபையே ஆரோக்கியமான சபையாகும். ஜெயங்கொள்ளுகிறவர்களுக்கு மிகப்பெரிய பரிசு உண்டென இயேசுவானவர் வாக்களித்திருக்கிறார்.

ஆரோக்கியமான சபையின் அடையாளங்களைக் குறித்து சிந்தித்துக்கொண்டிருக்கும் வேளையில், அப்போஸ்தலர் நடபடிகள் 2:42-47 வரையுள்ள பகுதியில் ஆதி திருச்சபையைக் குறித்த காட்சி நமக்காக கொடுக்கப்பட்டுள்ளது. அங்கே இவ்வாறாகப் பார்க்கிறோம்:

*அவர்கள் அப்போஸ்தலருடைய உபதேசத்திலும், அந்நியோந்நியத்திலும், அப்பம் பிட்குதலிலும், ஜெபம்பண்ணுதலிலும் உறுதியாய்த் தரித்திருந்தார்கள். எல்லாருக்கும் பயமுண்டாயிற்று. அப்போஸ்தலர்களாலே அநேக அற்புதங்களும் அடையாளங்களும் செய்யப்பட்டது. விசுவாசிகளெல்லாரும் ஒருமித்திருந்து, சகலத்தையும் பொதுவாய் வைத்து அநுபவித்தார்கள். காணியாட்சிகளையும் ஆஸ்திகளையும் விற்று, ஒவ்வொருவனுக்கும் தேவையானதற்குத்தக்கதாக அவைகளில் எல்லாருக்கும் பகிர்ந்து கொடுத்தார்கள். அவர்கள் ஒருமனப்பட்டவர்களாய் தேவாலயத்திலே அநுதினமும் தரித்திருந்து, வீடுகள்தோறும் அப்பம்பிட்டு மகிழ்ச்சியோடும் கபடமில்லாத இருதயத்தோடும் போஜனம்பண்ணி, தேவனைத் துதித்து, ஜனங்களெல்லாரிடத்திலும் தயவுபெற்றிருந்தார்கள். இரட்சிக்கப்படுகிறவர்களைக் கர்த்தர் அநுதினமும் சபையிலே சேர்த்துக்கொண்டுவந்தார்.*

Free Digital Copy From ServeNow

## ஆரோக்கியமான சபையின் ஒன்பது அடையாளங்களாவன:

- கடவுளின் வார்த்தையில் தியானமாயிருத்தல் (திருமறை)
- கிறிஸ்துவுக்குள் ஒருவொரிலொருவர் இசைந்திருத்தல் (ஐக்கியம்)
- அப்பம் பிட்குதலில் இணைந்திருத்தல் (ஒருமனப்பாடு)
- ஜெபத்தில் தரித்திருத்தல்
- கடவுள் பக்தி மற்றும் தூய ஆவியரின் செயல்பாடு
- ஐக்கியம் மற்றும் ஒருமனம்
- தாராளமனம், கொடுத்தல், தியாகம்
- ஆராதனை
- மக்கள் மீட்படைதல் மற்றும் சபையின் வளர்ச்சி

இயேசுவின் சீடராக தம்மை அர்ப்பணித்து வாழும் மக்களைக்கொண்ட ஒரு சபையானது, கடவுளின் வார்த்தைகளுக்கு தம்மை அர்ப்பணித்தும், ஒருவொருக்கொருவர் ஒப்புரவிலும், ஜெபத்திலும், கொடுத்தலிலும், ஆராதனையிலும் சிறந்து விளங்கும்போது கடவுளின் பேராசீர்வாதங்களை பெற்றனுபவிக்கும். அங்கே கடவுளின் பிரசன்னத்தை அநுபவிக்கலாம். தூய ஆவியர் பலமாகவும் ஆச்சர்யமூட்டும் விதத்திலும் அவர்கள் மத்தியிலே அசைவாடுவார். அங்கே கிறிஸ்துவில் ஐக்கியம் காணப்படும். ஆண்டவரால் மீட்பு பெறுபவர்கள் சபையினிடமாய் சேர்க்கப்படுவார்கள். கடவுளின் சபையானது இவ்விதமாக ஆரோக்கியமாகவும், வலிமையாகவும் பலுகிப்பெருகுவதாக!

Free Digital Copy From ServeNow

## பாடத்தை கற்றுக்கொள்ளவும் பிரதிபலிக்கவும் சில கேள்விகள்

- சபையைக் குறித்து என்ன கற்றுக்கொண்டீர்கள்? உண்மையில் சபை என்றால் என்ன?
- இயேசுவானவர் கட்டும் சபையில் எவ்வாறு ஒரு நபர் அங்கத்தினராகிறார்?
- சபையைக் குறித்ததான எந்த உருவகங்கள் உங்களுக்கு மிகவும் அர்த்தமுள்ளதாயிருக்கிறது. ஏன்?
- சபையின் நோக்கத்தைக் குறித்து சிந்திக்கும்போது, தனிப்பட்ட முறையிலே எந்த ஒன்று உங்களுக்கு அதிக கவனம் பெறவேண்டும் என நினைகிறீர்கள்?
- "ஒருவொருக்கொருவர்" என்னும் கூற்றுகளிலே எந்தக் கூற்றானது உங்களைப் பொறுத்தளவில் உயர்வானது. ஏன்?
- எழு சபைகளைக் குறித்த இயேசுவானவரின் வார்த்தைகளிலிருந்து உண்மையிலேயே என்னென்ன நேர்மறையான செயல்பாடுகள் நீங்கள் சார்ந்துள்ள சபைகளிலுள்ளது என்பதைக் கூறவும்?
- ஏழு சபைகளின் மீது கூறப்பட்ட குற்றச்சாட்டுகளில் எது உங்களின் சபையிலே காணப்படுகிறது? அதிலிருந்து மனந்திரும்பிடவோ, மாற்றம்பெற்றிடவோ நீங்கள் எவ்வாறு உதவ முடியும்?
- ஆரோக்கியமான சபைக்கான ஒன்பது அடையாளங்களில் எதுவெல்லாம் உங்கள் சபையிலே பார்க்கிறீர்கள்?
- ஆரோக்கியமான சபைக்கான ஒன்பது அடையாளங்களில் எந்தெந்த அடையாளங்களிலே உங்கள் சபை முன்னேற்றமடையவேண்டுமென ீங்கள் காண்கிறீர்கள்? அதற்காக எவ்விதத்திலெல்லாம் நீங்கள் நேர்மறையான விதத்திலும் முன்னேற்றும்படியும் பங்களிப்புச்செய்திட இயலும்?